Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

16 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
☎ 416-282-8059
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 பாலம் 19 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 01, 2006



நாட்டியப் பேரொளி மறைவு

03



சர்வதேச தமிழ் குறும்பட விழா

09



நேர்காணல் இயக்குனர் மகேந்திரன்

15

# இலங்கையில் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல்?

இலங்கையில் மறுபடி ஒரு பாராளுமன்றத் தேர்தல் டிசெம்பர் மாதத்தில் நடைபெறலாம் என்று தெரியவந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு மீதும், விடுதலைப் புலிகள் மீதும் சர்வதேச அழுத்தங்கள் பெரிய அளவில் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில், தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினை தொடர்பாக ஒரு முடிவுக்கு வர இலங்கை அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரு நியாயமான தீர்வின் மூலம் தீர்க்க வேண்டும் என்று சர்வதேசமும் ஒருமித்த குரலால் இலங்கைக்கு இடித்துக் கூறிவிட்டன. இந்நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் மகிந்தாவின் அரசு இது தொடர்பாக ஒரு முடிவுக்கு வர பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வர முயல்கின்றது.

இந்த முயற்சிக்கு மூன்றாம் தரப்பாக வெளிநாட்டைச் சேர்ந்த அனைத்துலக நாடாளுமன்ற யூனியனின் செயலாளர் நாயகம் அன்டஸ் தீவிரமாக முயற்சி எடுத்துள்ளார். இது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட அவர் அடுத்த வாரம் கொழும்பு வருகின்றார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் எதிர்கட்சியுடன் ஒன்றுபட்டுக் கையாள்வதற்கான பொது இணக்கப்பாடு ஏற்படமால், இந்த முயற்சிகள் தோல்வி அடைந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை டிசெம்பர் மாதம் நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராசபக்ச தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

## இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்ராப் தலையீடு

“இந்துக்களான விடுதலைப் புலிகளை ஏன் இந்துத் தீவிரவாதிகள் என்று உலகம் அழைப்பதில்லை?” என்று பாகிஸ்தான் அதிபர் முஸ்ராப் வட அமெரிக்காவில் வைத்து மிக காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று உலகம் முழுவதுமாக ஒரு சொற்பிரயோகம் செய்யப்படுவதை தான் கடுமையாக எதிர்ப்பதாகவும், தீவிரவாதத்துடன் இஸ்லாம் மதத்தை இணைத்துப் பேசப்படுவது தனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது என்றும் பாகிஸ்தான் அதிபர் தெரிவித்துள்ளார்.

“இது திட்டமிட்டு குத்தப்படும் முத்திரை. எனது நண்பர் அமெரிக்க அதிபரிடம் இஸ்லாமிய தீவிர வாதிகள் என்று பிரயோகம் செய்யவேண்டாம் என்று அவருக்கு ஆலோசனை கூறுவேண்டும். அவர் இதில் உள்ள நியாயத்தை புரிந்து கொள்வார் என்று நான் திடமாக நம்புகின்றேன்” என்றும் முஸ்ராப் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் பாகிஸ்தான் மறைமுகமாக தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிக்கின்றது என்றும், பின்லாடன் பாகிஸ்தானில்தான் இருக்கின்றார் என்றும் அமெரிக்கா, பிரிட்டிஸ் அதிகாரிகளின் மட்டத்தில் இருந்து விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.



இதையும் முஸ்ராப் மறுத்துள்ளார். ஆனால் இந்த விவகாரம் பாக்கிஸ்தான் மீது அமெரிக்கா ஒரு நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தலாம் என்ற கருதப்படுகின்றது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)

• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

“Making Dreams Reality”

HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED


RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1st PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.
Scarborough, ON.
*Independently owned and operated

THINKING OF BUYING / SELLING

HomeLife GTA Realty Inc., Brokerage *
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# வீரம், செல்வம், கல்வி இம்மூன்றும் விரவிய வாழ்வே விழுமிய வாழ்வு







வீர உணர்வும், செல்வ வளமும், கல்வி நலனும் வாழ்வின் வனப்பிற்கும் வளத்திற்கும் வகைசெய்வனவாகும். விசையுறு பந்தினைப் போல் வேண்டிய படி செல்லும் உடலும் அசைவுறு மனமும் அளவான செல்வமும் ஆற்றுப்படுத்தும் கல்வியும் வாழ்க்கைக்கு அவசியமாகும். இவற்றைப் பெறுவதற்காகவே உலகமகாசக்தியாம் பார்வதி தேவியை நவராத்திரி நாட்களில் மலைமகளாகவும், அலைமகளாகவும், கலைமகளாகவும் அதாவது துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும் பூசித்து வழிபடுகின்றோம். சொல்லுக்கடங்காகவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம் என்ற பாவலன் பாரதியின் பாடலுக்கு அமைய சக்தியை பக்திசெய்வதால் சித்திகள் கிட்டுவதுடன் முத்திக்கும் வழியேற்படும்.

**நா. க. சிவராமலிங்கம்**

சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி அவன் தேவிக்கு ஒன்பது ராத்திரி நவராத்திரி. எனவே தேவியை ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டுமென்பர். இதனால் சக்தியின் மகிமையும் சர்வவல்லமையும் விளங்கும். சர்வமும் சக்திமயம்.


உலகில் ஒருவன் தன்னை நிலைப்படுத்தவும் வழிநடத்தவும், பகையைப் புறந்தள்ளவும் உடல் உறுதியும் மன வலிமையும் மிக அவசியமாகும். தன்னிலையைத் தளராது காக்க இவை மிகமிக அவசியமாகும். மார்பில் வேல் பாய்ந்து மரணமெய்துதல் வீர உணர்வின் வெளிப்பாடாக முன்னர் கருதப்பட்டது. தோல்வியால் தளராத தன்மையும் வீர உணர்வேயாகும். மாற்றானை மன்னிப்பதும் வீர உணர்வேயாகும். இன்றுபோய் போர்க்கு நாளைவா என்ற இராமனது கூற்றில் வீர உணர்வு வெளிப்படுவதைக் காணலாம். இந்த வீர உணர்வை வேண்டியே துர்க்கையைத் துதிக்கின்றோம். இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள், அவன் வாயிற் சொல் செல்லாக் காசு. பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பர். பணத்தால் விலை போபவர்களும் உண்டு. பணத்தின் அருமையையும் பெருமையையும் கருதியே 'செய்க பொருளை' என்றார் போலும் வள்ளுவர். செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு என்பதற்கேற்ப பொருளுடையவர்க்கு சிறப்பும், கீர்த்தியும் ஏற்படும். கொள்ளக் கொள்ளக் குறையாத நிதியின் குறையை விரும்புவது பேராசை. அது வேண்டாம். அளவான செல்வத்தைப் பெற்று வளமேடு வாழ அவாவுவோம். திரு என்றால் அழகு, செல்வம், காந்தம், கவர்ச்சி எனப் பொருள்படும். எனவே செல்வத்திற்கு அதிபதியாம் திருமகளை சேவிப்போம். செல்வத்தின் பயனே ஈதல் என்பதும் மறப்பதற்கில்லை.

# யாத்திரை பத்து

மாணிக்கவாசகப் பெருமான் தில்லையில் எழுந்தருளி இருந்தபோது தம்மைப்போல உள்ளம் உருகும் அடியார்பலரையும் அழைத்து இந்த மாயப்பிறவியை விட்டுத் திருவடிக்குப் போகுங்காலம் வந்துவிட்டது. வாருங்கள் என்று கூப்பிடும் முறையில் இந்த யாத்திரைப்பத்தை அருளிச் செய்தார்.

புயங்கப்பெருமான் அருளினால் ஆட்பட்டவர்களே! உடையன் திருவடி அடையக் காலம் கிட்டிவிட்டது. ஆதலால் யாம் போவோம். நீங்கள் வந்து ஒருப்படுங்கள் என்று அழைக்கின்றார். ஆசையை அறவே வென்ற ஜீவாத்மன் ஒருவன் மூலம் நிகழும் செய்கைகள் அனைத்தும் ஈசன் செயல். "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று ஆசையை வென்ற புனித ஆத்மா சொல்லலாம். ஆனால் ஆசைக்கு அடிமையாய் இருக்கிற ஜீவாத்மன் செய்கிற பாவபுண்ணியங்களுக்கு அவனே பொறுப்பாளி. ஆசைக்கு உட்பட்டு பல பிள்ளைகளைப் பெற்றெடுத்து பராமரிக்க இயலாது வருந்தும் ஒருவன் நிலையில் அவன்தானே தனக்கு விதிவகை ஆகிறான். அறியாமையினால் அல்லது சரியான வாழ்க்கை வாழாமையினால் மனிதன் தன்னையே கெடுத்துக் கொள்ளுகிறான். நல்வாழ்க்கை வாழ்ந்து தன்னை எடுப்பவன் தனக்கே சுற்றம் ஆகிறான். யாத்திரை பத்துபாடல் ஒன்று

"தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்
யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர் என்னமாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு,
போம் ஆறு அமையின் பொய் நீக்கிப் 'புயங்கன்' ஆள்வான் பொன்அடிக்கே"



இறைவன் திருவருளைக் கொண்டு தங்களைத் தாங்களே உய்வித்தல் அது ஒப்பற்ற வாழ்க்கை முறையாகும். இறைவனை மறந்து அகங்காரத்தையும் யாம் ஆர் என்பதும், மமகாரத்தையும் வளர்ப்பது எமது ஆர் என்பதும் பெருமயக்கமாகும். நல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டவன் தனக்கே சுற்றமும், ஆசைக்கு ஆளானவன் அவன்தானே தமக்கு விதிவகையும் ஆகிறான் அன்பர்களே!

இறைவனை அடைவதற்கு பிறபொருள் வசப்படாது தாமகவே இருப்பவன் தம்வயம் உடையவராவர். சுற்றம் முதலிய எல்லாம் தாமே தமக்கு ஆவர். தானே தனக்கு விதிவகையினரை விட்டுவிடுங்கள் பொய் வாழ்வையொழித்து புயங்கனாள்வான் பொன்னடி புகுங்கள். உலகம் முழுவதுமே அன்பு வெள்ளம் பாய்ந்து அருட்பயிர் தழைக்க அப்பெருமானின் பொருள் சேர் புகழினை இடையறாது புகழுங்கள்! புற்தேயும் அவன் திருவடியினைத் தொழுங்கள். இத்தகைய இறைபணியில் நிற்றற்கும் காரணம் பலபிறவிகளிலே செய்த புண்ணியமே.

குழந்தைகள் தம் தாய் தந்தையர் இடத்து இருந்து தங்களுக்கு எல்லாம் வந்து அமைந்தன என்று முழுமனத்தையும் அவர்களிடத்தே திருப்புகின்றனர். பக்தன் தன்னுடைய உள்ளத்தை இறைவன் பால் அடைக்கலம் வைக்கிறான். பெற்றாரைப் பேண மகன் தன் உயிரையே கொடுக்கிறான். இதுவே பெற்றார் உள்ளத்தில் எழும் உணர்ச்சியே ஆனந்த கண்ணீர் துளியாக அரும்பும். ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனியுரிமையாகாது. அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் நிலைத்து இருந்து ஆனந்தத்தில் ஒடுங்குகின்றன. உலப்பிலா ஆனந்தத்தில் ஒன்றுபட்டு இருப்பவர் இறைவனை அடைந்தவர் ஆகின்றனர். 'அன்பே' காரணம்.

**கந்தையா சண்முகம்**

அன்பு அறிவு என்ற இரண்டு குணங்களைக்கைகொண்டு வாழ்ந்தால் ஆனந்தநிலையை, சமாதி நிலையை அடையலாம். அன்பின்வழியே அடைவதை பக்திமார்க்கம் என்கிறோம். அறிவின்வழியே செல்வதை ஞானமார்க்கம் என்கிறோம். அன்பும் அறிவும் ஒன்று சேர்ந்த ஒளிநிலையே சமாதியும் ஆனந்தமுகமாக ஓயாது ஊற்று எடுக்கிறது. இதைத்தான் தேஜோ மயானந்தம் என்கிறார் தாயுமானவர்.


விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# மகாத்மா காந்தியை பார்க்கப்போனது _2

நிலக்கோட்டை அப்படி ஒன்றும் அந்தக் காலத்தில் அரசியல் உணர்வுகள் மிக்க இடம் இல்லை. இதற்கு முன் திராவிட கழக கிளை ஒன்று தொடங்குவதற்கோ என்னவோ, பெரியார் வந்திருந்தார். வந்து நாடார் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தில் தங்கியிருந்தார். நாங்கள் பள்ளி பையங்கள். அவரைப் பார்க்க ஆவல். ஒரு மகரிசிபோல இருந்த அவர் தரையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

நிலக்கோட்டைச் சுவர்களில், “தன்மான திராவிடா, இன்னமுமா உறக்கம்?, “ஆரியனே வெளியேறு”, “பார்ப்பன ஆதிக்கம் ஒழிக”! என்ற வாசகங்கள். பெரியார் தவிர இரண்டு பெயர்கள் அடிபட்டன. தளபதி சி.என். அண்ணாதுரை, எம். ஏ. பின் டபிள்யூ. பி. சௌந்திர பாண்டியன், அவ்வளவு தான். சௌந்திர பாண்டியன் தேனீக்காரர் என்று நினைக்கிறேன். அதன் பிறகு இரண்டு நாட்களுக்கு தெருப்பசங்கள் “காந்தி வந்தாராம், பூந்தி தின்னாராம், வாந்தி எடுத்தாராம்” என்று கத்திக்கொண்டு திரிந்தார்கள். யார் இவர்களுக்கு இப்படி சொல்லிக்கொடுத்தது என்று தெரியவில்லை. ஒரு தெரு முனையில், ஒரு முறை காமராஜ் வந்து ஒரு சின்ன கூட்டத்தில் பேசியிருக்கிறார். அவ்வளவு தான். அங்கு ஏதும் எந்த கட்சி அலுவலகமும் இருந்ததை நான் பார்த்தது கிடையாது. ஒரு சின்ன அறையில் வாசக சாலை திறந்திருந்தார்கள். அதில் அனேகமாக திராவிட கழக பத்திரிகைகள் கிடக்கும். எதற்காக இவ்வளவும் சொல்கிறேன் என்றால், அந்த ஊரே திரண்டு மூன்று மைல் குறுக்கே கடந்து இடையில் வண்டியை நிறுத்தி மகாத்மாவை தரிசனம் செய்யக் கிளம்பியது என்றால், அதற்கான அரசியல் போதனையை ஊட்டிய கட்சி அலுவல்கள் ஏதும் இருந்ததில்லை. மாறாக, ஏதும் ஓரளவுக்கு இருந்தது என்றால் அது பெரியார் வந்ததன் நிமித்தம் சுவர்களில் கோசங்கள் எழுதப்பட்டதும், வாசக அறை ஒன்று திறக்கப்பட்டதும் தான். இது நிலக்கோட்டையைக் காலி செய்து கொடைகானலுக்கு இட்டுச் சென்றிருக்காது.

1946-ம் வருடம் நான் மதுரை சேதுபதி ஹை ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அரசியல் நிகழ்வுகளின் பரபரப்பும் சூடும் மதுரையில் படிந்துள்ளதை நான் உணர முடிந்தது. நான் இருந்தது சிம்மக்கல் பகுதியில். ஒரு நாள் வைகைக்கு அக்கரையில் தல்லா குளம் தமுக்கம் மைதானத்தில் அருணா ஆசப் அலி வந்து பேசப்போகிறார் என்று சொன்னார்கள். எங்களுக்கு எல்லாம் ஜெயப்பிரகாஸ் நாராயணும், அருணா ஆசப் அலியும் வானத்திலிருந்து குதித்த தேவர்கள். ஆங்கிலேயர்களை வதைக்கச் சொல்லி அனுப்பப்பட்டவர்கள். இப்படி ஒரு பிம்பம் மனதில். ஹஸாரி பாக் ஜெயிலிலிருந்து தப்பி தலை மறைவாகிவிட்ட அவர்களை போலீஸால் பிடிக்க முடியவில்லை. போலீஸிடம் சரண் அடையும்படி மகாத்மாவின் கட்டளை பிறந்த பிறகே அவர்கள் அகப்பட்டார்கள். எங்கள் கண்களுக்கு அவர் மறு பிறப்பெடுத்த ஒரு ஜான்ஸி ராணியாகத் தோற்றமளித்தார். அந்த வீராங்கனை மதுரைக்கு வருகிறார். தமுக்கம் மைதானத்தில் கூட்டம் நிரம்பியிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவரும் வருப்போகிறார் என்று சொன்னார்கள். காத்திருந்தோம் ஆவலோடு. தேவரின் பேச்சைக் கேட்க வேண்டும். அருணா ஆஸப் அலியைப் பார்க்கலாம். அவர் குரலைக் கேட்கலாம். வேறென்ன அங்கு யாருக்குப் புரியும்? ஆங்கிலமோ, ஹிந்தியோ எதில் பேசினால் என்ன? தேவர் வரவில்லை. இருட்டத் தொடங்கிவிட்டது. கடைசியில் அருணா ஆஸப் அலி வந்தார். அவர் பேசியதை யாரோ தமிழில் மொழிபெயர்த்தார்கள். பத்து பதினைந்து நிமிடம் ஆகியிருக்கும். மழை தூற ஆரம்பித்தது. வலுக்கக் கூடும். கூட்டம் கலைய ஆரம்பித்தது. அப்போது அருணா ஆஸப் அலி பேசியது மொழி பெயர்ப்பில் எங்களுக்குக் கேட்டது” சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து எத்தனையோ பேர் சிறையில் அடைபட்டார்கள். தடியடி பட்டார்கள். துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்தார்கள். ஆனால், இங்கு உங்களை எல்லாம் இந்த தூறல் விரட்டியடிக்கிறதே” என்று சொன்னதை மொழிபெயர்ப்பில் கேட்ட ஜனங்கள் நகரவில்லை. நின்ற இடத்திலேயே நின்று விட்டார்கள்.

## வெங்கட் சாமிநாதன்

கோடைஇடி என முழங்கவில்லை. அடுக்கு மொழி அவர்களை மயக்கவில்லை. ஏதோ ஒரு அம்மையார் ஹிந்தியில் பேச அதை மொழிபெயர்த்தவர் தமக்குத் தெரிந்த தமிழில் சொல்ல அந்த வார்த்தைகள் அந்த பெரும் கூட்டத்தைக் கட்டுப் படுத்தியது. இப்போதெல்லாம் டெல்லியானாலும் சரி, தமிழ் நாடானாலும் சரி, லாரியில் காசும் கொடுத்து சாப்பாடும் போட்டு, ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியும் செய்து கொடுத்தால் தான் தலைவர்களுக்கு கூட்டம் கூடும். அதை தன் கட்சியின் பலமாகப் பறை சாற்றுவார்கள். சில இடங்களில் உட்கார நாற்காலி இல்லையென்றால் கூட்டம் சேர்வதில்லை. அன்று காந்தி தொப்பி போட்டவர்கள் எல்லாம் எங்களுக்கு தேவர்கள். வானத்திலிருந்து வந்தவர்கள். ஒரு ஒல்லி நோஞ்சான் மனிதர் தில்லியிலிருந்தோ, சபர்மதி ஆஸ்ரமத்திலிருந்து தன் மெல்லிய குரலில் இந்தியாவை தன் குரலுக்காகக் காக்கவைத்துக் கொண்டிருந்தார். பி.எஸ் ராமையா தன் மணிக்கொடிக்காலம் நினைவுகளில் ஒரு சம்பவம் பற்றிச் சொல்லியிருப்பார். ராமையாவும் அவரது சகாக்களும் ஒரு நாள் இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா பார்த்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார்களாம். அப்போது அவருக்குப் பின்னாலிருந்து ஒரு குடிசை முன் பேச்சுக் குரல் கேட்டது. ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள் குடிசைக்கு முன். உள்ளிருந்து குரல். “அதோ போறாங்களே காந்திக் காரங்க, அவங்க பின்னாலேயே போ. ஒண்ணும் பயமில்லை” என்று.

காங்கிரஸ் தியாகிகளுக்கு இலவசமாக இரயில் பிரயாணம் இரண்டு வருடத்திற்கு ஒரு முறையோ என்னவோ கிடைக்குமே, அதைப் பயன்படுத்திக் கொண்டு, செல்லப்பா அவர்கள் ஒரு முறை எண்பதுகளில் தில்லி வந்திருந்தார். அவருடன் அவரது நண்பரும் காங்கிரஸ் தியாகியுமான, பி.என். ஸ்ரீனிவாசன் அவர் தில்லியில் பார்க்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது, பிர்லா மாளிகை தான். அங்கு தான் மகாத்மா கடைசியாக தங்கியது. மாலை பிரார்த்தனைக்குப் போகும்போது தான் ஜனவரி 30 -ம் தேதி கோட்சேயால் சுடப்பட்டு அமரரானது. பிர்லா மாளிகை இருக்கும் சாலை இப்போது 30 ஜனவரி மார்க் ஆகியுள்ளது. பிர்லா மாளிகையும் காந்தி நினைவில்லமாகி விட்டது. பின்புறம் இருக்கும் அறை அவர் விட்டுச் சென்ற வாறே பாதுகாக்கப்பட்டு வருகிறது. அங்கிருந்து சுடப்பட்ட இடம் வரை அவர் காலடிகள் சிமெண்டில் பதிய வைக்கப்பட்டுள்ளன. செல்லப்பா மகாத்மா சுடப்பட்ட இடத்தின் நினைவுச் சின்னத்தின் முன் நின்று வெகு நேரம் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தார். எனக்குத் தெரிந்து அவர் தில்லியில் பார்க்கவேண்டும் என்று சென்ற இடம் வேறு இல்லை. சில நினைவுகளை வேறு எதுவும் பாதிக்காது பாதுகாப்பவர் அவர். சிறையில் இருந்த போது தரப்பட்ட கைதி நம்பர் எழுதப்பட்ட நம்பர் ப்ளேட்டை கடைசி வரை வைத்திருந்தார். கைதியாக இருந்தது ஒரு புனித வேள்வியின் ஆகுதி ஆயிற்று. அந்த நாட்களின் ஆத்மாவே வேறு தான்.



# நாட்டியப் பேரொளி பத்மினி மறைவு

திருவாங்கூர் சகோதரிகளான லலிதா, பத்மினி, ராகினி ஆகியோரில் ஒருவரான பத்மினி காலமாகிவிட்டார். பத்மினி, ‘கல்பனா’ என்ற இந்திப் படத்தின் மூலம் அறிமுகமானார். தமிழில் முதன் முதல் ‘மணமகள்’ என்ற படத்தில் நடித்தார். சிவாஜி கணேசனுடன் பல படங்களில் இணைந்து நடித்துள்ளார். ‘தில்லான மோகனாம்பாள்’ படத்தில் இவர் வாயசைத்து நடித்த, நலந்தானா என்ற பாடல் பிரபலமானது. 1961 ஆம் ஆண்டு Dr. டி. கே ராமச்சந்திரனை மணந்தார். இவர்களுக்கு ஒரு மகனும் உண்டு. அமெரிக்காவில் New Jercy இல் பத்மினி நுண்கலைப்பள்ளி ஒன்றை நடத்தி வந்தார். கனடாவில் பல அரங்கேற்றங்களில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துள்ளார்.

சுமார் 250க்கு மேற்பட்ட படங்களில் இவர் நடித்துள்ளார். பாசில் இன் இயக்கத்தில் இவர் பாட்டியாக நடித்த “பூவே பூச்சுடாவா” இவரது நடிப்பு இலக்கணத்துக்கு ஒரு சிறப்பான மைல்கல்.



சிவாஜி கணேசனை திருமணம் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பத்மினி, ஆனந்த விகடனுக்கு அளித்த பேட்டியில் அவர் வேறு சாதி, நான் வேறு சாதி அதனால் தான் இது சாத்தியப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இவர் நடித்த சில சிறப்பான படங்கள்: தூக்குத் தூக்கி, காஞ்சனா, பணம், எதிர்பாராதது, மங்கையர் திலகம், தேவதாஸ், தங்கப்பதுமை, வஞ்சிக்கோட்டை வாலிபன், மதுரைவீரன், மேராநாம் ஜோக்கர், இருமலர்கள், வியட்நாம் வீடு, திருவருட்செல்வன், தில்லான மோகனாம்பாள். இவற்றுடன் M.G.R இன் ரிக்ஷாக்காரனிலும் ஒரு பாத்திரத்தில் நடித்துள்ளார்.

இவர் 1932 ஆம் ஆண்டு 12 ஆம் திகதி கேரளாவில் தங்கப்பன் பிள்ளைக்கும், சரசுவதிக்கும் மகளாக பிறந்தார். இவரது சகோதரிகளான லலிதா, ராகினி அவர்களும் திரையுலகில் பல படங்களில் நடித்துள்ளார்

# காப்புறுதியும் மூலதனமும்

நிதி உழைப்பது ஒரு விடயம். அதனை சேமித்து தேவையான நேரத்தில் செலவிடுவது என்பது இன்னொரு விடயம். நிதியை சேமிக்கும் போது நாம் பல விதமான Investments முதலீடு செய்கிறோம். குறிப்பாக நாம் கடுமையாக உழைத்த பணத்தை வீணாக அழிக்க எவருக்குமே விருப்பம் இருக்கமாட்டாது. எல்லோருக்கும் தமது மூலதனம் நன்றாக வளர வேண்டும். அதேவேளை எனது முதல் குறையாமல் இருக்கவும் வேண்டும் என்பது கூடியோர்களின் கருத்தாகும்.

இத்தகையயோரின் கோட்பாட்டிற கிணங்க ஒரு மூலதனம் ஒன்று இருக்கிறது. அதன் பெயர் ‘Segregate fund’ விரிவாக குறிப்பிடின் இதில் முதலீடு செய்யும் போது உங்கள் முதலிற்கு Guarantee ஆகவும் அதேவேளை நீங்கள் கூடிய வருமானத்தைப் பெறும் வாய்ப்பும் ஏற்படுகிறது. இந்த மூலதனம் முதன் முதலாக RBC வங்கியினால் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து வெளிவர இருக்கிறது. மேலதிக விவரங்களிற்கு Jey Ahamparam - RBC Insurance 416.301.1733.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# மரண அத்தாட்சிப் பத்திரம்

## உயிர் இழப்பின் பின்பு ஆயுள் காப்புறுதியிலிருந்து நட்டஈடு பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய முக்கியமான பத்திரம்?

"உயிர் இழப்பு" (Death) ஏற்பட்ட பின்பு இவ் உயிர் இழப்புக்கு உரியவரின் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈட்டினை பெற உரித்துடையவர் முதலில் தயார் நிலையில் பெற்று வைத்திருக்க வேண்டிய பத்திரம் "மரண அத்தாட்சி பத்திரம்" ஆகும். (இது பிரதி ஆக இருக்க கூடாது) அவ்வாறு பிரதியாக இருந்தால் அது சட்டரீதியாக உறுதிப் படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

இதனை ஆங்கிலத்தில் "Death Certificate" அல்லது "Funeral Directors Certificate of Death" என குறிப்பிடப்படும்.

இது கனடாவில் அரச அதிகாரம் பெற்று மரணச்சடங்குகளை நடத்தும் நிறுவனத்தினால் (Funeral Homes) அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகியினால் (Excutive Director) கைச்சாத்திட்டு வழங்கப்படும். ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈட்டினை பெற்று கொள்வதற்கு தேவையான மிக மிக முக்கியமான பத்திரம் இதுவாகும். (இலங்கை, இந்தியா உட்பட ஏனைய நாடுகளில் அதற்குரிய அதிகாரம் பெற்ற அதிகாரிகளினால் கைச்சாத்திடப்பட்டு இப்பத்திரம் வழங்கப்படும்)

கனடாவில் வழங்கப்படும் மரண அத்தாட்சி பத்திரத்தில் பொதுவாக பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- மரணமாகியவரின் பெயர்
- அவரது சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number)
- வதிவிட விலாசம்
- மரணம் நடந்த இடம்
- மரணம் நடந்த திகதி
- பிறந்த இடம்
- பிறந்த திகதி, ஆண்டு, மாதம்
- உடல் தகனம் செய்யப்பட்ட இடம்
- மரணமானவருக்கு அடுத்த வாரிசு (Next of Kin) உறவு முறை, முகவரி.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் இங்கு இப்பத்திரத்தில் அதிகார பூர்வமாக வழங்க வேண்டிய தகவல்கள் ஆகும்.

இவ் அதிகார பூர்வமான பத்திரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டு அது சமர்ப்பிக்காமல் எந்த சந்தர்ப்பத்திலும் கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து நட்டஈடு என்பது என்றுமே பெற முடியாது.

கனடா தவிர்ந்த ஏனைய நாடுகளில் தங்கி நிற்கும் போது அங்கு உயிர் இழப்பு நடந்தால் அங்கு உள்ள அதிகாரம் பெற்ற நிறுவனத்தினால் உறுதிபடுத்தப்பட்ட மரண அத்தாட்சி பத்திரம் பெற்று நட்டஈடு கோரும் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கனடாவில் ஆயுள்காப்புறுதி வைத்திருக்கும் ஒருவர் இலங்கையில் போய் தங்கி நிற்கும் போது உயிர் இழப்பு நடந்து தொடர்ந்து அங்கு இருந்து வழங்கப்படும் இம்மரண அத்தாட்சி பத்திரம் பொதுவாக சிங்களத்தில் அல்லது தமிழில் இருப்பது வழமையாகும். அது பின்னர் கனடாவில் காப்புறுதி நட்டஈடு பெறுவதற்காக சமர்ப்பிக்கும் போது அதிகார பூர்வமாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு, கைச்சாத்திட்ட பின்பே நட்டஈடு கோரும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மிக பெரும் தொகை நட்டஈடாக இருந்தால் இந்நட்டஈட்டினை வழங்கும் ஆயுள் காப்புறுதி கம்பனி ஏனைய நாட்டில் இருந்து வந்த "மரண அத்தாட்சி பத்திரம்" உண்மையான மரண அத்தாட்சி பத்திரமா? என்பதும் குறிப்பிடப்பட்ட ஆயுள் காப்புறுதிக்கு உரியவர் உண்மையாகவே மரணமாகி விட்டாரா? என்பதனையும் ஆயுள் காப்புறுதி கம்பனி எப்படியோ தமது செலவில் உறுதிபடுத்தி கொள்ளும்.

மரணம் நடந்த தினத்தில் இருந்து, நட்டஈடு என்பது கையில் வந்து சேரும் வரை சில நேரங்களில் காலதாமதம் என்பது ஏற்படலாம். கனடாவில் வசிக்கும் ஒருவர் கனடாவில் மரணமாகி கனடாவில் உள்ள அதிகாரிகளினால் மரண அத்தாட்சி பத்திரம் வழங்கப்படுவதால் ஆயுள் காப்புறுதி கம்பனியின் நட்டஈடு வழங்கும் கம்பனிக்கு பத்திரத்தின் நம்பத்தகுந்த நிலைமையினை உறுதிபடுத்த பலமணி நேரங்கள் ஏற்பட தேவையில்லை என்பதால் காலதாமதம் இல்லாது நட்டஈடு கிடைக்கும். ஆனால் ஏனைய நாடுகளில் மரணம் நடந்து, தொடர்ந்து நட்டஈடு வழங்கும் நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்லும் போது, இத்தகைய "உறுதிபடுத்தல்" என்பதில் ஏற்படும் காலதாமதம் என்பது நட்டஈடு வழங்குவதிலும் காலதாமதத்தினை உருவாக்கலாம். ஆனால் இங்கு மரணம் நடந்த நாளில் இருந்து நட்டஈடு தொகை வழங்கும் நாளுக்கு இடையில் காலதாமதம் ஆகும் ஒவ்வொரு நாளுக்கும் அதற்குரிய வட்டியுடன் சேர்ந்தே நட்டஈடு தொகை குறிப்பிட்ட நட்டஈடு பெறுபவருக்கு வழங்கப்படும்.


"மரணம்" நடந்தவுடன் ஆயுள் காப்புறுதி கம்பனிக்கு அதனை உடன் அறிவித்து விட்டால் உடனடியாக ஆயுள் காப்புறுதி கட்டணமாக மாதாமாதம் வங்கியில் இருந்து பெற்று கொள்ளும் கட்டணத்தினை நிறுத்தி விடுவார்கள். அதன் பின்னர் நட்டஈடு பெற உரித்துடையவர் எவரோ அவருக்கு, அல்லது முகவருக்கு இப்பத்திரம் உட்பட, நட்டஈடு கோரும் விண்ணப்பம் (Claimant's Statement) மரணத்தினை உறுதி படுத்தும் வைத்தியரின் அத்தாட்சி பத்திரம் (Death Claim Physician's Statement) என்பன போன்ற பத்திரங்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆயுள்காப்புறுதி கம்பனி கடிதம் அனுப்பி கொள்ளும்.. தேவையான பத்திரங்களை சமர்ப்பித்தவுடன் நட்டஈடு தொகைக்குரிய காசோலை கையில் வந்து சேரும்.






A.V.M.
COOKING CLASSES
உணவுத் தயாரிப்பு முறைகளும் (புரியாணி வகைகள் உட்பட) கேக் தயாரிப்பு முறை களும், அலங்கரிப்பும் (ஐசிங்) டோல் மேக்கிங், தலை அலங்காரம் என்பனவும் குறைந்த செலவில் நிறைவாக கற்பிக்கப்படும்.
அழையுங்கள் : Ahi - 416.299.6053

ELECTRICAL WORKS
FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளிற்கு: 416-286-2880



YARL WINDOW
BLINDS & DRAPERY
BLINDS DRAPERIES AND SHUTTERS
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்
விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

BREAD MASTER BAKERY
புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் செப்ரெம்பர் நடுப்பகுதியில் இருந்து பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.



- ரொட்டி வகைகள்
- புரியாணி வகைகள்
- புட்டு வகைகள்
- மரக்கறிச் சாப்பாடு
- சிக்கின், மட்டன் சாப்பாடு
- இடியப்பம்
- நூடில்ஸ்

ஓடர்கள் ( Order) ஏற்றுக்கொள்ளப்படும்
மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்

கடை திறக்கும் நேரம்
காலை 6:00 மணி முதல்
இரவு 10:00 வரை



உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்
416.299.5083
31 Tapscott Rd. B3, Scarborough
Malvern Area

# புராண இதிகாச காலங்கள் தொட்டு இன்றுவரை பிரசித்தியுடன் விளங்கும் கீரிமலை

## ஓர் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் கூடிய வரலாறு

மாருதப்புரவீக வல்லி வரலாற்றுடன் தொடர்புடைய மூன்று ஊர்கள் அருகருகாக ஒவ்வொரு மைல் தூரத்தில் முக்கோண ரீதியில் அமைந்துள்ளன. அவைதாம் காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலை.

எமது ஊருக்கு எப்படி காங்கேசன்துறை எனப்பெயர் வந்தது? கயாத்துறை, கசாத்துறை என இருந்த ஊருக்கு காங்கேயன் எனும் விக்கிரகம் வந்து இறங்கியமையால் என்றும், காங்கேயன் எனும் சோழநாட்டுத் தளபதி கந்தசாமி விக்கிரகத்தைக் கொண்டு வந்தார் எனவும் இரு கதைகள் உண்டு. அக்காலத்தில் 'ய' கரத்தை 'ஸ' கரமாகச் சொல்லித் தரும் ஆசிரியரும் இருந்தனர். அதனால் 'ய' எல்லாம் 'ச' வாக மாறிற்று எனலாம். உதாரணமாக முயல் = முசல், வாயல் = வாசல், ய, சவாக மயங்குகிறது.

மாவிட்டபுரம், முன்பு கோயிற் கடவை எனும் குறிச்சியை உள்ளடக்கியதாக இருந்தது. அதன் அண்மையில் மாருதப்புரவீகவல்லி வசிக்க ஒரு பாடிவீடமைத்து ஒரு பூஞ்சோலையும் அமைத்து, கீரிமலை ஊற்றுக்குச் செல்வதற்கு ஒரு சுரங்கப்பாதையும் அமைத்து சேடிகள், காவலாளிகளுடன் குதிரை முகம் கொண்ட மகளைச் சோழமகாராசன் அனுப்பி வைத்தான் என்பது வரலாறு. அவள் தங்கியிருந்த இடம் குமாரத்திபள்ளம் எனும் பெயரால் இன்றும் விளங்குகிறது. அவர்கள் வழிபட்ட சிறுகோவில் பிற்காலத்தில் குமாரகோவில் எனும் பெயரோடு அயலவர்களால் ஓலைக்கொட்டிலாகவும், பின்னர் கட்டடமாகவும் கட்டப்பட்டு வழிபாடு இயற்றப்பட்டுவந்தது. குதிரை முகம் எனும் நோய் நீங்கிய இடமாகையால் மா விட்ட புரம் எனப்பெயர் பெற்றதோடு மக்கள் வழிபாட்டுத் தலமான கோவிற்கடவைக் கோவிலையும் பெரிய கோவிலாகக் கோபுரங்கள் அமைத்தும், தில்லை வாழந்தணர்களையும் கோவிலுக்குத் தேவையான பணியாளர் களையும் குடியேற்றினான் என்பது வரலாறு.

இவைபற்றிய வரலாறு யாழ்ப்பாணம் முழுவதும் கர்ண பரம்பரைக் கதையாக நிலவியே வந்தது. 'சுரங்கம்' அமைத்து' என்பது வேரூன்றிய கதை. எமது ஆச்சி (பாட்டி) தனது பூட்டியொருவராம் குளட்டாவத்தை மேட்டிலிருந்து பார்த்தால் மேற்குப் பள்ளத்தில் ஒரு பூஞ்சோலையுள் ஓர் இளவரசியும் தோழியும் உலா வருவார்களாம். அவர்கள் மினுங்கல் உடைகள் அணிந்திருப்பார்களாம். தாம் அரையில் சிறுதுண்டுமாத்திரம் அணிந்திருப்பார்களாம். கிட்டப்போய் பார்க்கவென்று ஓடினால் எங்கிருந்தோ காவலாளிகள் ஈட்டியோடு வந்து துரத்தி விடுவார்களாம். இதுவும் கர்ண பரம்பரையாக வந்திருக்கலாம்.

**கீரிமலை : கீரிமுகம் குதிரைமுகம் என்பன ஒரு நோயே தவிர மிருகங்களின் முகங்களல்ல. நோய் எது என்பதன் முரண்பாடுகளும் அதன் தீர்வான கருதுகோள் ஒன்றும் இங்கே முன்வைக்கப்படுகின்றன.**

ஏதோ ஒரு 'கரு' இல்லாமல் செவிமூலக்கதைகள் பரவி இருக்க முடியாது. இதற்கு இருபதாம் நூற்றாண்டில் ஒரு தடயம் கிடைத்தது. சிமெந்து தொழிற்சாலையில் கல்லுக்கிளறும் பகுதியைக் 'குவாறி' என அழைப்பர். அந்தச் சுண்ணாம்புக்கல்லே பிரதானமான மூலப்பொருள். வெடிகள் வைத்துக் கல்லுக் கிளறும் போது ஒருநாள் அந்தவெடி பாரிய சத்தத்தோடு வெடித்தது. பயந்து போன தொழிலாளர்கள் குவிந்தனர். ஒரு பெரிய துவாரம் ஏற்பட்டு அதன்வழியாக தண்ணீர் வெளியே சிறிது நேரம் பாய்ந்தது. உள்ளே ஒரு ஆள் நிற்கக்கூடிய குகை தென்பட்டது. உள்ளே எட்டிப்பார்த்த போது கிழக்கிலிருந்து வடக்கே போவது போன்ற சுரங்கம் தெரிந்தது. சோழமன்னனின் சுரங்கக் கதை பரம்பவே, மேலிடம் அதை மூடி அடைத்து விட்டு வேறொரு பக்கத்தால் கிளறும் படி உத்தரவிட்டது.

**- குறமகள்-**

எட்டு வருடங்களின் பின் குவாறி கிருஷ்ணன் கோவில் மேட்டுக்கு சமீபத்தில் நடக்கும்போது அதே போன்ற பாரிய வெடிச்சத்தம் கேட்டது. பெரிய வாய் அகலத்தில் கல்பிளந்து தூக்கி யெறியப்பட்டிருந்தது. கீரிமலை வீதியால் தான் நாங்கள் பாடசாலை செல்வது வழக்கம். சனம் குவிந்து நிற்பதைக் கண்டு விசேடம் வினவிய போது சுரங்கம் ஒன்று வெடித்திருக்கிறது என்றார்கள். பாடசாலைக்கு நேரமாகிவிட்டதால் திரும்பி வரும்போது அங்கே இறங்கி நடந்தோம். நாலு, ஐந்து பேர்மட்டுமே நின்றார்கள். காவலாளி ஒருவர் ஆட்களை விரட்டிக்கொண்டு நின்றார். கதை பரவிய வேகத்தில் பேரூந்தில் மக்கள் நிறைய வந்து பார்வையிடுவது மட்டுமன்றி உள்ளே நுழைந்து நடந்து போகிறார்களாம். ஓரிருவர் 5, 10 யார் உள்ளே சென்று ஒரே இருள் என்று திரும்புகிறார்களாம், ஆபத்து அல்லவா?

நாமும் உள்ளே இறங்கினோம். அரை அடிதான். பாதம் நனையும் அளவு நீரோடிக் கொண்டிருந்தது. கீழே மணல் போன்று மிருதுவாக இருந்தது. இரண்டு, மூன்று அடி உள்ளே நடந்தோம். பக்கவாட்டில் சில கற்கள் துருத்திக்கொண்டிருந்தன. நிமிர்ந்து நிற்கக் கூடிய அளவுக்கு அதன் உயரம் இருந்தது. ஐந்துபேர் வரிசையாக நிற்கக் கூடிய அகலம் இருந்தது.

மேலே வந்து பார்த்தபோது நகுலமுனிவரின் குகையிலிருந்து சிறிது சத்தராகவும் பழைய குவாறி, குமார கோவிலடி என்பன ஒரு சத்தார் தெரு போடக்கூடியதாக அந்த அமைப்பு இருந்தது. மறுநாள் அரச வாகனங்களும் ஆட்களும் கமறாக்களும் என ஒரே ஆரவாரம். அதன்பின் அவ்விடம் அடைக்கப்பட்டு மூடப்பட்டு விட்டது. ஆயினும் பத்திரிகையில் புவியியல் பட்டதாரி ஒருவர் எழுதியிருந்தார். சுண்ணாம்புக் கற்பிரதேசங்களில் நிலத்தின் கீழ் இப்படியான துவாரங்கள் குகைகள் போன்றன காணப்படுவது சகஜமாம். அப்படி ஒன்று தான் இதே தவிர, சுரங்கப்பாதை அல்லவாம் என நிலவரைப்படங்கள் கீறி எழுதியிருந்தார். பழங்காலத்துப் பட்டிக்காட்டுச் சனங்களுக்கும் இந்த சுண்ணாம்புக்கல் ஆராய்ச்சி தெரிந்திருக்கிறது. அல்லது சோதிடம் தெரிந்திருக்கின்றது. அதனால்தான் கற்பனை விரிந்ததோ? அப்படி நினைக்கிறார்கள் போலும்.

சின்னாள் சிற்றறிவு கொண்ட மனிதருக்கெல்லாம் தம் காலத்தில் காண்பதும் கற்பதும் தான் உண்மையானவை. மற்றவையெல்லாம் பொய்யும் புழுகும் தான் எனும் செருக்கான எண்ணம். எங்களுக்கு முன்னே கோடிக்கணக்கான வருடங்களில் புத்திகூர்மையான மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை சிந்திக்க மறுக்கிறார்கள். 1,500 வருடங்களுக்கு உட்பட்டது தான் சுரங்கப்பாதை. இடமிருந்தால் கற்கள் வளரும் தன்மையுடையன எனவும் யாரோ சொன்னார்கள். ஜியோலொஜி பற்றிய அறிவு எமக்கு இல்லை. சுரங்கங்கள் பற்றிய வரலாறுகள் வாசித்துள்ளோம். அதனால் நமக்கு ஏதோ நல்ல நம்பிக்கை இருந்தது. சோழ அரசர்கள் தம்நாட்டில் வைத்திருக்கும் சுரங்கங்கள் போன்று புதிய இடத்தில் சிலநாள் வாழப்போகின்ற தனது கன்னிப் புத்திரிக்கு ஒரு சுரங்கம் அமைத்துக் கொடுக்காமல் இருப்பார்களா!

எங்கள் ஆட்சி வருங்காலத்தில், நாம் துறைசார் நிபுணர்களின் ஆராய்ச்சி மூலம் உண்மையை அறிவோம். கீரிமலை மிகப்பழைய காலங்களிலிருந்தே மிகப் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்து வந்த ஒரு பிரதேசம். திருமுறை காலங்கள் எல்லாம் மிகப்பிற்பட்டவை. ஆனால் திருத்தம்பலேஸ்வரம் எனக் குறிக்கப்படும் ஓர் ஆலயம் தேவர், முனிவர் காலங்களில் அதாவது இராமர் காலங்களிலே இருந்ததாக கூறப்படுகின்றது.

நாம் இப்போ கூறும் கீரிமலை பல அழிவுகளின் பின்னும் தன்னைக்காத்து நின்ற ஈஸ்வரன் ஆலயமும் நீரூற்றுமாகும். இவ்விடம் ஆதிகாலத்தில் ஒரு சிறுமலையாக அல்லது குன்றாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது இது கடல் மட்டத்திலிருந்து 240 அடியளவில் தான் உயரம் இருக்கிறது. காங்கேசன்துறை கலங்கரை விளக்கம் (வெளிச்ச வீடு) அளவு உயரமே இம்மேடு எனப்படித்திருந்தோம். முற்காலத்தில் யாழ்ப்பாணக்குடா நாட்டிலேயே கீரிமலை ஒன்றுதான் பெயர்பெற்ற இடமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் கீரிமலையை ஒட்டிய பலபெயர்கள் யாழ்ப்பாணம் முழுமைக்குமாக விளங்கின.

காரணகாரியத் தொடர்புகள் காட்டப்பட்டுள்ள சில கதைகள் திரேதா யுகத்தைச் சேர்ந்த இராமகதைக் காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றுமே இயற்கையாக அமைந்த இத்தல விசேடம் தமிழர் மாத்திரமல்ல அக்காலத்தில் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது போல் சீனா, மலாயா, கிரேக்கம் போன்றவற்றின் வணிகர்களும் அறிந்திருக்கிறார்கள். பொதுவாக குடாநாட்டின் வடமேற்குப் பிரதேசம் மணல்தரை ஆங்காங்கே பண்படுத்தப்பட்ட நிலங்களைத் தவிர மற்றவற்றால் இது மணற்றிடர் எனப் பெயர் பெற்றது. பிற்காலத்தில் யாழ்ப்பாணன் பரிசு பெற்ற மணற்றிடர் இதுதான். அதன்பின் நம்மைக் கைப்பற்றி ஆண்ட சிங்களவரால் வலிகாமம் எனப் பெயரிடப்பட்டதும் இதேதான். எல்லோருக்கும் தெரியும் 'வலி' எனில் மணல், கமம் எனில் கிராமம் / ஊர்.

கீரிமுகம் நோய் என்னவாக இருக்கலாம் என ஆய்வு செய்ய நேர்ந்தபோது நிறைந்த தலவிசேடக் கதைகளே ஆரம்பத்தில் கிடைத்தன. எனவே அவற்றையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். (தொடரும்)




**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
paramg@gmail.com
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# விளையாட்டுத் தகவல்கள் 199

கோலாம்பூரில் நடைபெற்ற மூன்று நாடுகள் போட்டியின் இறுதிச் சுற்றில் மேற்கிந்தியத் தீவுகளை எதிர்த்து பட்டத்துக்காக அவுஸ்திரேலியா மோதியது.

அந்த வாய்ப்பை பெறுவதற்காக கோலாலம்பூரில் வெள்ளிக்கிழமை பகலிரவாக நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் உலக சாம்பியன் அவுஸ்திரேலியாவிடம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றுப்போனது இந்தியா. பந்துவீச்சாளர்களின் சிறப்பான ஆட்டத்தால் வலுவான அவுஸ்திரேலியாவை 213 ஓட்டங்களுக்குச் சுருட்டிய இந்திய அணி துடுப்பாட்டத்தில் மீண்டும் தோல்விகண்டது. 195 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது இந்தியா சுமார் 7 ஓவர்கள் மீதமிருந்து குறிப்பிடத்தக்கது. இத்தொடர் முழுவதுமே சொதப்பிவரும் திராவிட் இந்த ஆட்டத்திலும் மீளவில்லை. அவர் கிளார்க் வீசிய பந்தில் ஏழு ஓட்டங்களில் வெளியேறினார். மிகவும் எதிர்பார்த்த சச்சின், சேவாக் ஆகியோரும் ரசிகர்களின் ஆவலை நிறைவேற்றவில்லை.

மோங்கியோ 63 - ஆனால், திடீரென இந்த ஆட்டத்தில் களமிறக்கப்பட்ட தினேஷ் மோங்கியா அபாரமாக ஆடி பாலைவனச் சோலையாகக் காட்சியளித்தார். அவருக்கு உறுதுணையாக யாரும் ஆடமுடியவில்லை. மோங்கியா 63 ஓட்டங்களைச் சேர்த்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 16 மாதங்களுக்கு பிறகு அவருக்கு வாய்ப்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. கடைசியாக டில்லியில் பாகிஸ்தானுக்கு எதிராக அவர் விளையாடியுள்ளார்.

பிரெட் லீ - சேவாக்கையும், சச்சினையும் 20 ஓட்டங்களுக்குள் வெளியேற்றி, மற்றைய பந்துவீச்சாளர்களின் பணியை எளிதாக்கினார் வேகப்பந்துவீச்சாளர் பிரெட் லீ. அவர் 38 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றி நாயகனாகத் திகழ்ந்தார். ஸ்டுவர்ட் கிளார்க், பிராட் ஹாக் ஆகியோர் தங்களது பங்கிற்கு தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். புகழ்வாய்ந்த கிளென் மெக்ராத் ஒருவிக்கெட் கூட வீழ்த்தாவிட்டாலும், எட்டு ஓவர்கள் வீசி வெறும் 25 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்தார்.

இந்திய வீரர் ராய்னா சிறிது நேரமே களத்தில் இருந்தாலும் 26 சிறப்பான ஓட்டங்களைச் சேர்த்தார்.

தோனி 23 - அதிரடி வீரர் மகேந்திரசிங் தோனி 23 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, லீ வீசிய பந்தில் 'காடச்' கொடுத்து ஏமாற்றத்துடன் வெளியேறினார். லீ வீசிய பந்தை 'நோ போல்' என பாகிஸ்தான் நடுவர் ராஃப் அறிவிக்கத் தவறியதால், தோனி விரைவிலேயே ஆட்டமிழக்க வேண்டிய தாயிற்று. அவுஸ்திரேலியா போலவே இந்தியாவின் தொடக்கமும் அமைந்திருந்தது. 96 ஓட்டங்களுக்கு இரு அணிகளுமே ஐந்துவிக்கெட்டுகளை இழந்திருந்தன.

ஹாடின், ஹாக் ஜோடி - முன்னதான அவுஸ்திரேலியாவின் இன்னிங்ஸில் ஹாடின், ஹாக் ஜோடி ஏழாவது விக்கெட்டுக்கு குவித்த 77 ஓட்டங்களே அந்த அணிக்கு வலு சேர்த்தன. இல்லையேல் அவுஸ்திரேலியா 200 ஓட்டங்களைத் தாண்டுவதே கடினமாக அமைந்திருக்கும்.

ஹாடின் 46 ஓட்டங்களையும், ஹாக் 38 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

இந்தியத் தரப்பில் அனைவரது பந்துவீச்சுமே சிறப்பாக அமைந்திருந்தது. ஹர்பஜன் ஒரு விக்கெட்டை மட்டுமே கைப்பற்றினார். என்றாலும் 10 ஓவர்கள் முழுவதும் வீசி 24 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்தார்.

டாஸ் வெற்றி - 'டாஸ்' வென்ற அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் ரிக்கி பாண்டிங் முதலில் பேட் செய்வதாக அறிவித்தார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கடந்த போட்டியில் விளையாடிய இந்திய அணியில் இரண்டு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீசாந்த், யுவராஜ் சிங் ஆகியோருக்கு பதிலாக கைஃப் மோங்கியா ஆகியோர் விளையாடினர். அதேபோல, கடந்த போட்டியில் விளையாடிய அவுஸ்திரேலிய அணியில் நாலு மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாண்டிங், மெக்ராத், மார்ட்டின், பிராட் ஹாக் ஆகியோர் விளையாடினர்.

**எஸ். கணேஷ்**

மீண்டும் அவுஸ்திரேலியா!

கோலாம்பூரில் நடைபெற்ற மூன்று நாடுகள் போட்டியில் உலக சம்பியன் அவுஸ்திரேலியா கோப்பையைக் கைப்பற்றியது. கின்ராரா மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை பகல் இரவாக நடைபெற்ற இறுதிப் போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணியை 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது அவுஸ்திரேலியா. இவ்வெற்றி மூலம் லீக் சுற்றில் பெற்ற அதிர்ச்சித் தோல்விக்கு பழிதீர்த்துக் கொண்டது பாண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி. மிகவும் எதிர்பார்ப்பை பெற்ற இறுதி ஆட்டம், மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களின் மோசமான துடுப்பாட்டத்தால் உப்புசப்பின்றி முடிந்தது. அடுத்து பேட் செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 34.2 ஓவர்களில் ஆட்டமிழந்து 113 ஓட்டங்களையே சேர்த்தது. ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழந்தவண்ணம் இருந்தது. ஓட்டம் ஏதும் சேர்க்காத நிலையில் கெயிலை ஆட்டமிழக்கச் செய்து, அதிர்ச்சி அளித்தார் இத்தொடர் முழுவதும் சிறப்பாக ஆடிவரும் பிரெட் லீ.

அவரைத் தொடர்ந்து மோர்டன், சந்தர்பால், ஆகியோர் அடுத்தடுத்து பிராக்கென் வீச்சில் வீழ்ந்தனர். இதனால் முதல்நிலை துடுப்பாட்ட வரிசை ஆட்டம் கண்டது. இத்தொடர் முழுவதும் சிறப்பாக ஆடிவரும் அணித்தலைவர் பிரையன் லாரா ஐந்து ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சார்வான் நிதானமாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தினார். ஆனால் அவருக்கு உறுதுணையாக விளையாட யாரும் ஒத்துழைக்கவில்லை. 56 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது மேற்கிந்தியத் தீவுகள். சார்வானுடன் ஜோடி சேர்ந்த ஸ்மித் அணியின் புள்ளிவிபரம் 100 ஓட்டங்களை கடக்க உதவினார். அதன் பின்னர் பிரெட் லீயின் பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து மற்றவர்கள் ஆட்டமிழந்தனர். சார்வான் 36 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது பரிதாபமாக ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

பிரெட்லீ நாலுவிக்கெட்டுகளும், பிராக்கென் மூன்று விக்கெட்டுகளும், வாட்சன் இரண்டு விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

மந்தமான தொடக்கம் - முன்னதாக அவுஸ்திரேலிய அணியும் தொடக்கத்தில் மந்தமாக ஆடியது. பிராட்ஷா, ஸ்மித் ஆகியோரின் பந்துவீச்சை சமாளிக்க அவுஸ்திரேலிய வீரர்கள் திணறினர். ஒரு கட்டத்தில் 80 ஓட்டங்களுக்கு மூன்று முக்கிய விக்கெட்டுகளை இழந்தனர்.

மார்ட்டின், சைமண்ட்ஸ் ஜோடி - அதன் பின்னர் களமிறங்கிய மார்ட்டினும், சைமண்ட்சும் பொறுமையாக ஆடி அணியின் ஸ்கோரை மெல்ல மெல்ல உயர்த்தினர். இருவரும் தலா 52 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தனர். இந்த ஜோடி நாலாவது விக்கெட்டுக்கு 73 ஓட்டங்களைச் சேர்த்தது. ஹஸே 30 ஓட்டங்களுடனும், ஹாடின் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டபுள் நாயகன் லீ

ஆட்ட நாயகன் மட்டுமல்லாது, தொடர் நாயகனாகவும் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் பிரெட் லீ விருது பெற்றார். மூன்று போட்டிகளில் அவர் 12 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

தொடரை வென்றது தென்ஆபிரிக்கா

சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது ஒருதின துடுப்பாட்ட போட்டியில் தென்ஆபிரிக்கா அபார வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் 2 - 0 எனக் கைப்பற்றியுள்ளது தென்ஆபிரக்கா. மூன்றாவது போட்டி புதன்கிழமை நடைபெறுகிறது. கிம்பர்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் தென்ஆபிரிக்கா வென்றது. இவ்விரு அணிகளிடையிலான இரண்டாவது போட்டி ஈஸ்ட் லண்டனில் திங்கட்கிழமை நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைச் சேர்த்தது. 153 ஓட்டங்களைச் சேர்த்தால வெற்றி என்ற இலக்குடன் ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்கா 27.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றி பெற்றது. அணித்தலைவர் காலிஸ் 26 ஓட்டங்களைச் சேர்த்தபோது ஒருதின கிரிக்கெட்டில் எட்டு ஆயிரம் ஓட்டங்களும், 205 விக்கெட்டுகளும், டெஸ்ட் போட்டியில் எட்டு ஆயிரம் ஓட்டங்களும், 200 விக்கெட்டுகளையும் சேர்த்த முதலாவது தென்ஆபிரிக்க வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

சாதனை வீரர் ஷுமாக்கர்

மோன்சாவில் நடைபெற்ற இத்தாலியன் கிராண்ட் பிரீ ஃபார்முலா - 1 போட்டியில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் ஜேர்மனி வீரர் மைக்கேல் ஷுமாக்கர் (37).

மோன்சாவில் அவர் கைப்பற்றும் ஐந்தாவது சாம்பியன் பட்டம் இது. மொத்தத்தில் அவருக்கு இது 90வது பட்டமாக அமைந்தது. இவ்வெற்றியையடுத்து எட்டாவது முறையாக ஃபார்முலா - 1 உலக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்ற ஷுமாக்கர் முனைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவரை நடைபெற்ற பந்தயங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ள ஸ்பெயின் வீரர் ஃபெர்னாண்டோ அலான்சோவைக் காட்டிலும் இரண்டு புள்ளிகள் மட்டுமே ஷுமாக்கர் பின்னடைவு பெற்றுள்ளார். சாம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்க இன்னும் மூன்று பந்தயங்கள் மட்டுமே உள்ளன. சீனாவில் ஒக்ரோபர் முதல் திகதியும், ஜப்பானில் ஒக்ரோபர் எட்டாம் திகதியும், பிரேசிலில் ஒக்ரோபர் 22ஆம் திகதியும் அடுத்தடுத்த பந்தயங்கள் நடைபெற உள்ளன.

ஷுமாக்கர் ஓய்வு



இதற்கிடையே இந்த 2006 சீசனுடன் ஃபார்முலா - 1 போட்டிகளில் இருந்து ஷுமாக்கர் ஓய்வு பெறப்போவதாக அவரது ஃபொராரி நிறுவனம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது. ஃபொராரி நிறுவனத்துடன் ஷுமாக்கர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் இந்த சீசனுடன் முடிவடைவது நினைவு கூரத்தக்கது.


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

LG.Ayurvedic Medical Services (SriLanka)



# நாமும் நமது இல்லமும்

## ராஜா மகேந்திரன்

## தொடர் - 236

| ஆண்டு | வீட்டின்சராசரி விலை |
|---|---|
| 1996 | $198,150 |
| 1997 | $211,307 |
| 1998 | $216,815 |
| 1999 | $228,372 |
| 2000 | $243,255 |
| 2001 | $251,508 |
| 2002 | $275,231 |
| 2003 | $293,067 |
| 2005 | $335,907 |
| 2004 | $315,231 |
| 2006 | $351,278 |
| | (Aug. வரை) |

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின் சராசரிவிலை, கடந்த பத்து வருடங்களாக அதிகரித்து வருவதை, மேலே தரப்பட்ட புள்ளிவிவரப்பட்டியலில், அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே இந்தக்காலப்பகுதியில் விற்கப்பட்டு, வாங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இதிலிருந்து அறியக்கூடியது, வீடு விற்று வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது அல்லது இந்தப்பகுதியில் கூடிய மக்கள் வந்து சேருகின்றனர். கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கனடிய மத்தியவங்கி வட்டிவீதத்தை அதிகரித்து வந்தது. ஆனால் கடந்த இரு மாதங்களாக வட்டிவீதம் அதிகரிப்பதை மத்திய வங்கி நிறுத்தி வைத்துள்ளது. கனடிய பொருளாதாரத்தின் அதிகரிப்பும், பணவீக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குமாக வட்டிவீதம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வந்தது. இவை இரண்டும் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்ததும், இந்த அதிகரிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது போல் தோன்றுகின்றது. அதுமட்டுமல்லாது பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் கூற்றின்படி, இந்த ஆண்டின் இறுதிவரை கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படாது எனவும் தெரிகின்றது. இப்பொழுது கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதம் 4.25% ஆகக் காணப்படுகின்றது. அத்துடன் முதன்மை வட்டிவீதம் (Prime Rate ) 6% ஆகவும் காணப்படுகின்றது. (முதன்மை வட்டி வீதம், கனடிய மத்தியவங்கியின் வட்டி வீதத்தை விட 1.75% அதிகமாகக் காணப்படுவது வழக்கம்)

இந்த முதன்மை வட்டிவீதமே, Variable Mortgage யின் வட்டிவீதம் Line of Credit இன் வட்டி வீதம்... போன்றவற்றை கணக்கிட பாவிக்கப்படுகின்றது. கடந்த சில மாதங்களாக வீட்டுச்சந்தையில் விற்பதற்காக இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் வீடு வாங்குபவர்களிற்கு போதியளவு தெரிவுகள் காணப்படுகின்றது. இதனால் இப்பொழுது வீடு வாங்குபவர்களிற்கு விற்பவர்களை விட கூடிய தெரிவும் நன்மைகளும் ஏற்படலாம். 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் கைமாறிய வீடுகளின் எண்ணிக்கை 6976 ஆகும். இந்த எண்ணிக்கை ஓகஸ்ட் 2005 ஆண்டில் கைமாறிய வீடுகளின் எண்ணிக்கையை விட சற்று குறைவாகக் காணப்படுகின்றது. 2006ஆம் ஆண்டில் கடந்த எட்டு மாதங்களாக கைமாறிய வீடுகளின் எண்ணிக்கை 60,658 ஆகும்.

இதே காலகட்டத்தில் கடந்த வருடத்தில் (2005) விற்று வாங்கிய வீடுகளின் எண்ணிக்கை 60,309 ஆகும். இந்த வருடத்தில் 2006 கடந்த எட்டுமாதங்களில் (ஜனவரி - ஓகஸ்ட்) விற்று வாங்கிய வீடுகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 2005 இதே காலத்தை விட 349 வீடுகள் அதிகமாகவும் அத்துடன் விற்கப்பட்ட வீட்டின் சராசரி விலையும் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆனால் அமெரிக்காவின் நிலைமை வேறாகக் காணப்படுகின்றது. இந்த ஆண்டில் புதிதாக தொடங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அங்கும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வந்த வட்டிவீதமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்டு செயல் படுத்தப்பட்டுள்ளது.


அண்மையில் எண்ணையின் (Crude oil) விலையில் ஏற்பட்ட இறக்கம் பணவீக்கத்தை ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என்று எதிர்பார்ப்பதால், அங்கும் வட்டிவீதத்தில் உடனடியாக அதிகரிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. அமெரிக்காவின் பொருளாதாரம் சிறந்த முறையில் இருப்பதாக கூறமுடியாது. இதனால் அமெரிக்காவில் வீட்டின் விலையில் தொடர்ந்தும் இறக்கத்தை எதிர்பார்க்கலாம் என, பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள். ஆனால் கனடிய பொருளாதாரம் சிறந்த நிலையில் உள்ளது. இதனால் கனடாவில் வீட்டின் விலையில் மாற்றத்தை நேரடியாக அமெரிக்காவுடன் ஒப்பிடுவது சிறந்தது ஆகாது? இருந்தும் கனடாவில், சிறப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின்விலை கடந்த பத்து வருடங்களாக தொடர்ந்து அதிகரித்தே வந்திருக்கின்றது.

இந்நிலைமை எவ்வளவுகாலம் தொடரும், தொடரலாம்?

கனடாவின் மக்கள் தொகை 32.5 மில்லியனை இப்பொழுது தாண்டியுள்ளது. இதற்கு புதியவர்களின் வரவே முக்கிய காரணமாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் எதிர்காலத்தில் வயதான கனடியர்கள் அதிகரிப்பதால் இதனை சரி செய்வதற்கு இப்பொழுது வரும் புதியவர்களின் எண்ணிக்கையை குறைந்தது 1% இற்கு அதிகரிக்க வேண்டுமென கூறப்படுகின்றது. இந்நிலைமை நிறைவேறினால் வீட்டின் விலையில் பெரிய இறக்கம் ஏற்படும் என எதிர்பார்க்கலாமா?

யூலை முதலாம் திகதி கனடிய அரசு நடைமுறைப்படுத்திய 1% GST இறக்கம் பொருளாதாரத்தில் சிறிதளவு மாற்றம் ஏற்படுத்தியதாக கூறப்படுகின்றது. மேலும், மத்திய பொருளாதார மந்திரி (Finance Minister) Jim Flaherty அண்மையில் CTV News இற்கு வழங்கிய செவ்வியில் கனடிய கடன்பழுவை மேலும் குறைக்கப் போவதாகவும், மேலதிக வரிக்குறைப்பை நடைமுறைப் டுத்துவதைப் பற்றியும் சிந்திப்பததாக கூறியுள்ளார். இவை கனடிய பொருளாதாரத்தில் நேர்த்தியான விளைவுகளை ஏற்படுத்தலாம்?

இவை வீட்டின் விலையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**


145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

**Brand New Semi Detach**



9th Line & North of Steeles
- Walk out
- 4 Bedroom
- 3 Washroom
- 4 Brand new Appoiances
- $319,900

**Detached Bungalow**




Scar. Golf Club & Lawrence
- Detached Bungalow
- 3 Bedroom
- 2 Bedroom BSMT Apt.
- Walkout BSMT
- $299,000

**Detached 2 Storey**




Morningside & Sheppard
- 4 Bedroom
- 3 Washroom
- BSMT Finished Walk out
- 2 Kitchen
- $299,900

**Detach 2 Storey**



Morningside & Sheppard
- 3 Bedroom
- BSMT Finished
- BSMT Apt. Possible
- $239,900

**Townhouse 2 Storey**



Morningside & Ellesmere
- 3 Bedroom
- Upgraded
- Low Maintence fee
- $184,900

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# சென்னை அநுபவங்கள்

## எனது நாடக அனுபவங்கள் (9)

### ஹலோ! ஹலோ!

நான் செலையூரிற் சேர்ந்த வேளை என்னைப் பகடிவதை செய்தவர் திரு. இரங்கநாதன் என்ற மேல்வகுப்பு மாணவர். எனினும் செலையூரில் அவரே எனது சிறந்த நண்பராகவும் பின்னாளில் மாறினார். அவரும் நானும் சேர்ந்து காதலும் கத்தரிக்காயும், ஹலோ ஹலோ, மந்திரவாதி ஆகிய மூன்று நாடகங்களில் நடித்திருக்கிறோம்.

ஹலோ ஹலோ 1955ல் செலையூர் விடுதி ஆண்டு விழாவில் அதன் திறந்தவெளி அரங்கில் மேடையேற்றப்பட்டது. அதில் இரண்டேயிரண்டு பேர்தான் நடிகர்கள்- இரங்கநாதனும் நானும். அதனை எழுதியவர் திரு. கிருஷ்ண மூர்த்தி என்ற இன்னொரு செலையூர்வாசி.

நாடகத்தின் கதைச் சுருக்கம் இதுதான்:

இரங்கநாதன் தனது வாடகை அறையில் மகிழ்ச்சிகரமாகத் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்க நான் உள்ளே வருகிறேன். மகிழ்ச்சிக்குரிய காரணத்தைக் கேட்க, தன்னை இதுவரை காலமும் திரும்பியும் பாராத காதலி சற்றுமுன் தொலைபேசியில் அழைத்துப் பேசினாள் என்று சொல்லி அவள் அழகையும் முதற் சந்திப்பின் அநுபவங்களையும் அவன் எனக்கு விவரிக்கிறான்.

தொலைபேசி மீண்டும் அடிக்கிறது. அவன் வேலைக்கு விண்ணப்பித்திருந்த கம்பனி அவனுக்கு வேலை தருவதாக அறிவிக்கிறது. அதனைத் தொடர்ந்து அவன் மேலும் உற்சாகம் அடைகிறான். அந்த வேலைக்குத் தன்னைவிட வேறு எவரும் தகுதியாக இருக்க முடியாது என்று தனது திறமைகளை எனக்கு அவிழ்த்துக் கொட்டுகிறான்.

சிறிது நேரத்தில் மீண்டும் தொலைபேசி அடிக்கிறது. அவன் எடுத்த அதிட்டலாபச் சீட்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் விழுந்திருப்பதாகச் செய்தி வருகிறது. அவன் துள்ளிக் குதிக்கிறான். ஒரு லட்சத்துக்கு என்ன செய்யலாம் என்று இருவருமாக ஆராய்கிறோம். பல திட்டங்களைப் போடுகிறோம்.

மீண்டும் தொலைபேசி. நண்பன் ஆர்வத்தோடு அதனைத் தூக்குகிறான். அவன் முகத்தில் மாற்றங்கள்! நடையில் தளர்ச்சி! ஐயோ என்று நிலத்தில் விழப்போகும் நிலையில் நான் அவனைத் தாங்குகிறேன். 'என்னடா? என்ன நடந்தது? என்ன செய்தி?' என்று கேட்கிறேன்.

என்னைப் போலவே பார்வையாளருக்கும் ஆவல் அதிகமாகிறது. அவன் மெல்ல நிமிர்ந்து நின்று, பெருமூச்சுகள் விட்டு, தொலைபேசிச் செய்தியைச் சொல்லப்போவது போல் உன்னி, பின்னர் 'ஐயோ அதை நான் எப்படிச் சொல்வேன்' என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுகிறான். நான் அவனைத் தேற்றுகிறேன். அவன் சொல்கிறான்:

'இன்று முழுக்க வந்த தொலைபேசி அழைப்புகள் எனக்கில்லையாமடா! அது வேறு ஒருவனுக்காம். இணைப்பை மாறித் தந்திட்டாங்களாம்' என்று அவன் சொல்லத் திரையும் விழுகிறது.

### பச்சையப்பன் கல்லூரியில் சிவப்புக் கொடி

'ஹலோ ஹலோ' நாடகம் நடந்து முடிந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் நாடகத்தை எழுதிய திரு. கிருஷ்ணமூர்த்தி நல்ல செய்தி ஒன்றைத் தெரிவித்தார். சென்னையில் அக்காலத்தில் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையில் ஆண்டுதோறும் நாடகப் போட்டி நடத்தப்படுவதுண்டு. அவ்வாண்டுப் போட்டிக்கு எமது நாடகத்தை அனுப்பக் கல்லூரித் தமிழ்த்துறை தீர்மானித்து, தகவல்களைத் தன்னிடமிருந்து பெற்று விண்ணப்பத்தை அனுப்பி விட்டதாகவும் கூறினார். தமிழ் தொடர்பான இதுபோன்ற விடயங்களைக் கல்லூரித் தமிழ்த் துறைதான் கவனித்துவருவது வழக்கம். கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இந்தமுறை எமது நாடகம் தெரிவு செய்யப்பட்டமை எமக்குக் கிடைத்த பெரிய வெற்றி. அது செலையூர் விடுதிக்குக் கிடைத்த வெற்றி என்றும் விடுதி நிர்வாகம் பெருமைப்பட்டுக் கொண்டது.

போட்டி பச்சையப்பன் கல்லூரியில் மூன்று நாட்களாக நடந்துகொண்டிருந்தது. எமது நாடகம் இறுதி நாளன்று மேடையேற இருந்தது. அன்றைய தினம் நடிகர் சந்திரபாபு அவர்கள் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

மிக அமைதியாக இருந்த அவை எமது நாடகம் அறிவிக்கப்பட்டதும் சத்தம் போடத் தொடங்கியது. சென்னைக் கிறித்துவக் கல்லூரி என்றதும் கூச்சல் கூரையைப் பிளந்தது. தொடர்ந்து இரங்கநாதனின் முதல் வசனத்துக்குக் கூச்சல்! நான் மேடையேறியதும் கூச்சல்! கூச்சலோ கூச்சல்! பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் எமது நாடகத்தைக் குழப்புவதற் கென்றே திட்டமிட்டுச் சத்தமிடுகிறனர் என்பது தெரிந்தது.

இருந்தாற்போல் இரங்கநாதன் மேடையை விட்டு இறங்கி நடுவர்களுக்கு முறையிட்டான். நான் உள்ளே சென்று திரையை இழுக்கச் சொன்னேன். அரங்கம் மூடப்பட்டது. நாடகம் நின்றுவிட்டது. இதனை எவருமே எதிர்பார்க்க வில்லை. அதனைத் தொடர்ந்து அவையில் முழுமையான அமைதி நிலவியது.

இரங்கநாதன் திரும்பி வந்தான். நாடகத்தை முதலிலிருந்து தொடங்குவோம் என்றேன். நடுவர்கள் கூச்சலைப்பற்றிக் கவலைப்படாது விட்ட இடத்திலிருந்தே தொடங்கச் சொல்கிறார்கள் என்றான். திரையை இழுக்கச் சொல்லி விட்ட இடத்திலிருந்தே நாடகத்தைத் தொடங்கினோம்.

கல்லூரிப் போட்டி நாடகங்கள் முழுநீள நாடகங்கள் அல்ல. எல்லாமே ஒரு மணித்தியால அல்லது முக்கால் மணித்தியால நாடகங்கள்தாம். எமது நாடகத்தைத் தொடர்ந்து நடந்த நாடகத்தைப் பார்த்தோம். எவ்வித கூச்சலோ குழப்பமோ இன்றி நாடகம் நடந்தேறியது.

### எதிர்பாராத முடிவு

பச்சையப்பன் கல்லூரிக்கும் கிறித்துவக் கல்லூரிக்குமிடையில் உட்பகை (cold war) புகைத்துக் கொண்டிருப்பது வழக்கம். அது இப்படியான நாடகப் போட்டி மற்றும் நேருக்கு நேரான விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் போன்றவை நடைபெறுகையில் தலைவிரித்தாடும். ஆடிப் பின் அடங்கும் என்றாலும் எமது நாடகத்தைக் குழப்பிவிட்டதால் எமக்கு வந்த ஆத்திரம் அடங்கவில்லை.

மூன்றாவது இடத்துக்கும் வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வந்து, முடிவு அறிவிக்கும்வரை காத்திராமல் கல்லூரிக்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தோம். மண்டபத்தை விட்டு வெளியேறிக் கல்லூரி வெளிவாயிலை நோக்கிச் செல்கையில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஒலிபெருக்கியில் முடிவுகளைக் கேட்டபடி நடந்துகொண்டிருந்தோம்.

மூன்றாவது இடம் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து கைதட்டல்கள். இரண்டாவது இடத்துக்கும் வலுவான கைதட்டல்கள். 'முதலாவது இடம் ஹலோ ஹலோ, சென்னைக் கிறித்துவக் கல்லூரி' என்று அறிவிக்கப்பட்டதும் எங்களால் நம்பவே முடியவில்லை. இரங்கநாதனின் கைப் பொதியை வாங்கிக்கொண்டு 'ஓடு ஓடு' என்று துரத்தினார் திரு. கிருஷ்ணமூர்த்தி. 'சென்னைக் கிறுத்துவக் கல்லூரி!' என்று ஒலிபெருக்கியில் மீண்டும் அழைப்பு!

நாங்கள் இருவரும் கைகளைக் குலுக்கிப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு பொதிகளை நிலத்தில் வைத்துவிட்டு அவற்றுக்கு மேலே அமர்ந்து ஆனந்தக் காற்றைச் சுவாசித்துக கொண்டிருந்தோம். இரங்கநாதன் பெரிய வெற்றிக் கிண்ணத்துடன் திரும்பி வந்தான். எங்கள் இருவரையும் கட்டித் தழுவினான். வெற்றிக் கிண்ணத்தில் எங்கள் பெயர்கள் பொறிக்கப் பெற்றுக் கல்லூரி அலுவலகத்தில் எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் சில நாட்கள் அது காட்சிப் பொருளாக வைக்கப் பட்டிருந்தது. கல்லூரிப் பொதுக் கூட்டத்திலும் எங்களுக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கப் பட்டன. செலையூர் மேற்பார்வைப் பேராசிரியரும் (Dr. Kibble) எங்களைப் பாராட்டி விளம்பரப் பலகையில் கடிதம் போட்டிருந்தார்.



கவிஞர் வி. கந்தவனம்



# ஐந்தாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்படவிழா

நடந்தேறிய காலம் - புரட்டாதி 16ஆம் நாள் நண்பகல் 12மணி
இடம் - ஸ்காபரோ மக்கள் மண்டபம்
நெறியாள்கை- சுயாதீன கலை திரைப்பட மையம்

பார்வையாளர்களில் பலர் குறும்படம் என்றால் என்ன என்ற குழப்பத்தில் ஆழ்ந்திருந்தபொழுது, அவையில் தர்சினி வரப்பிரகாசமும், சிவதாசனும் முன் வந்தனர். ஓரிரு படங்களின் பின்னர் ஸ்காபரோ பகுதி கவுன்சிலர் றேமண்ட் சோ சிறப்புரையாற்றினார். தர்சினி தொடர்ந்து விழாவை தொகுத்தளித்தார். தர்சினிக்கு சிறப்பு பாராட்டுக்கள். சபையில் எழுந்த கேள்விகளுக்கு இயக்குனர்களை பதிலளிக்கச் செய்ய வேண்டும். அதேசமயம் தேவையற்ற கேள்விகளை சபையினரிடமிருந்து தவிர்க்க வேண்டும். தர்சினியை தேர்ந்தேடுத்த அமைப்பினருக்கு முதல் விருது.

விழாவைப் பற்றிய அவதானங்களில் முதலில் வருவது குறும்படங்களே.

**அம்மா - இயக்கம் பிரீஜிவி துரைராசா - கனடா - 25 நிமி.**
பிள்ளையார் சுழி, கடவுள் வாழ்த்துக்கு பதிலாக, இங்கு அம்மாவுடன் விழா ஆரம்பமானது. பிரீஜிவி அறிமுக இயக்குனர். வேலைக்குச் செல்லும் தாய்க்கும் (மாலையில்) சிறுவயது மகளுக்குமிடையில் நடைபெறும் சம்பவங்களே அம்மா. பேச்சுத்தமிழ் பல இடங்களில் இடறியது. சிறுபிள்ளையின் நடிப்பு படத்துக்கு சிறப்பூட்டியது. படத்தை இன்னமும் குறுக்கி 15 நிமிடத்திற்குட்பட்டதாக்கி இருக்கலாம். அடுத்த விழாவில் நம்பிக்கையுடன் பிரீஜிவியின் படத்தை எதிர்பார்க்கலாம்.

**கேள்விக்குறி - இயக்கம் சிறி - இந்தியா- 30 நிமி.**
தீராநதி புரட்டாதி இதழில் ஒசூரில் நடைபெற்ற திரைப்படவிழா பற்றிய கட்டுரையில் சிறப்பாக குறிப்பிடப்பட்டது. விழாவில் காண்பிக்கப்பட்ட படங்களில் குறிப்பிடத்தக்கது. வீட்டை விட்டு வெளியேறும் சிறுவர்கள், பின்னாளில் பாலியல் தொழிலாளிகளாக தரகர்களாக மாற்றப்பட்டு எய்ட்ஸ் போன்ற நோய்க்குள்ளாக்கப்படுகிறார்கள் என்ற கருவை மையமாகக் கொண்டது. விவரணத் திரைப்படம் போலவும், அதே சமயம் குறும்படம் போலவும் படைக்கப்பட்டுள்ளது. வழமைக்கு மாறாக இப்படத்தில் இச்சிறுவர்களிடம் ஆண்கள் நடந்து கொள்ளும் முறை பதிவாக்கப்பட்டுள்ளது. விழாவின் இறுதியில் நடுவர் Tod Witham கூறியது போல் படப்பிடிப்புக்கருவியும் ஒரு பாத்திரமாகவே மாறியுள்ளமை இப்படத்தின் சிறப்பம்சம். இப்படம் சிறந்த சமூக நலனைக் கொண்ட படத்துக்கான விருதைப் பெற்றுள்ளது.

**3. உருமாற்றம் - இயக்கம் பி. சிவகுமார் - இந்தியா - 30 நிமி.**
கடந்த விழாவில் சிறந்த இயக்குனர், சிறந்த படத்துக்கான விருதைப் பெற்ற பி. சிவகுமாரின் மற்றொரு படம் சிறப்புக்காட்சியாக காண்பிக்கப்பட்டது. இப்படம் இந்தியத் தேசிய சிறந்த குறும்பட விருதை ஏற்கனவே பெற்றுள்ளது. பரம்பரையாக வாழ்ந்து வரும் வீட்டையும் காணியையும், ஒரு தொழிற்சாலை கட்டும் முகவருக்கு விற்றுவிட்டு அமெரிக்கா செல்ல விரும்பும் மகனுக்கும் தகப்பனுக்கும் இடையில் நடைபெறும் மனப்போராட்டமே இப்படம். காலம், காலமாக வாழ்ந்து விருட்சியமாகவுள்ள மரங்களின் அழிவு ஏற்படுத்திச் செல்லவுள்ள சூழல் அழிவு, இந்த மரங்களுடன் தகப்பனுக்கு உள்ள ஆத்மார்த்தமான உறவு என பல பரிமாணங்களுடன் கதை நகர்கிறது. இறுதியில் காலத்தின் உயிர்ப்பாக தோன்றியுள்ள பேரன் மரங்களின் விதைகளை கைகளுக்குள் அடக்கியவாறு தாத்தாவுடன் பயணிக்கின்றான். சிறப்பான தொழில்நுட்பம், கதை நகர்வு, நடிப்பு என பல அம்சங்களுடன் பதிவாகியுள்ளது. புதிய குறும்படப் படைப்பாளிகள், திரைப்பட ஆர்வலர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம்.

**4. Who was it இயக்கம் - வலன்ரையன் ஞானநாத்தன் - கனடா - 12நிமி.**
பாடசாலைச் சிறுவர்களைக் கொண்டு பதிவாக்கப்பட்டுள்ளது. Who was it எங்களையும் குடைந்தெடுக்கும் கேள்வி அதுவே? புதிய இயக்குனர் அறிமுக முயற்சி பல தொழில்நுட்ப குறைபாடுகள். இது இளைஞர்களின் காலம் சபையினர் அவர்களுக்கு அளித்த பாராட்டே அவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கும்.

**5. பிள்ளை - இயக்கம் சுமதி ரூபன் - கனடா - 10 நிமி.**
பல குறும்படங்களை கனடிய தமிழ்த்திரைப்பட உலகிற்கு அளித்த சுமதி ரூபனின் படம். ஒளிப்பதிவு ரூபன், ஒரு பெண் இரண்டு குழந்தைகளுடனும், வயதான - மனப்பிறழ்வுக்குட்பட்ட வயதான தாயுடனும் படும் துன்பங்கள் பதிவாக்கப்பட்டுள்ளன. கறுப்பு வெள்ளையில் படமாக்கப்பட்டுள்ளது. இப்படம் இரு விருதுகளை தட்டிச் சென்றது. சிறந்த நடிகை அதீதா, புலம்பெயர்வு படங்களுக்கான சிறந்த படத்துக்கான விருது என்பன அவை. படத்தின் சிறப்பம்சங்கள் பல. குழந்தைகளின் நடிப்பு, தாயின் நடிப்பு (அஜீதா), கறுப்பு, வெள்ளை ஒளிப்பதிவு, நெறியாள்கை, திரைக்கதை, விழாவின் குறிப்பிடத்தக்க பதிவுகளில் இதுவும் ஒன்று.

**6. உபசாந்தி - இயக்கம் செல்வகுமார் - கனடா - 25 நிமி.**
வானொலிக்கலைஞர், பாடகர் என அறிமுகமான செல்வகுமாரின் மற்றொரு பரிமாணம் திரைப்பட இயக்குனர். போரில் காயமுற்ற போராளிக்கு சிகிச்சையளிக்க மறுத்த வைத்தியர், கனடா வருகின்றார். இங்கு வயோதிபர் விடுதியில் எவராலும், பெற்ற பிள்ளைகளாலும் பார்க்கப்படாமலும், வாழ்கின்றார். அவரது மனச்சாட்சி, குற்ற உணர்வு அவரது முகத்தில் வெளிப்படுகிறது. தாயக சூழலை அழகாக பதிவாக்கியுள்ளார். இவரது முதல் படமா இது என எண்ண வைக்கும் நெறியாள்கை. பாடலை தவிர்த்து இன்னமும் சிறிது நேரம் குறுக்கியிருக்கலாம். வித்தியாசமான கரு. செல்வகுமார் நம்பிக்கையை விதைத்துள்ளார்.

**7. To be continued - ரூபன் - கனடா - 7 நிமி.**



ரூபனின் மற்றொரு படைப்பு இது. ரூபனின் சிறப்பான ஒளிப்பதிவுக்கு இப்படம் சான்று. நெறியாள்கையும் அவரே. கணவன், மனைவிக்கிடையே ஏற்படும் தகராறு. மனைவி தனது சுதந்திரத்தையும், இருப்பையும், நிதானத்துடனும், தெளிவுடனும், திடமாகவும் நிலைநாட்டுகிறாள். இப்படம் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை தட்டிச் சென்றது. படத்தின் மற்றொரு சிறப்பம்சம் திரைக்கதை. விழாவின் நட்சத்திரப்படைப்பில் இதுவும் ஒன்று.

**8. The Seance - ( ஆவிகளுடன் தொடர்பாய் வாழுதல்) - அருண் வைத்தியநாதன் - அமெரிக்கா - 5 நிமி.**
அருண், அமெரிக்காவில் இருந்து வந்து கலந்து கொண்டார். ஆவிகளுடன் கதைக்கும் ஒருவரிடம் ஒருவன் தனது காதலி தன்னைத் திருமணம் செய்வாளா என ஆவியிடம் கேட்குமாறு கூறுகிறார். ஆனால் அவனுக்கு கிடைக்கும் பதில் அவனுக்கு அதிர்ச்சி அளிக்கின்றது. அவனது காதலி, அவனது நெருங்கிய நண்பன் மூலம் கர்ப்பமுற்றுள்ளாள் என்பதே அச்செய்தி. ஆவியுடன் கதைப்பவர் சிறப்பாக நடித்துள்ளார். விழாவில் காட்டப்பட்ட படங்களில் இருந்து அந்நியப்பட்டுள்ளது. அருண் தெரிவு செய்த கருவே இதற்கே காரணம். கடந்த விழாவில் இவரது படங்கள் பார்வையாளர்களின் பாராட்டை பெற்றது. ஆனால் இம்முறை பல திரைப்பட படைப்பாளிகளின் பாராட்டைப் பெற்றது. ஒரு நல்ல குறும்படத்துக்குரிய பல அம்சங்களை கொண்டுள்ளது இப்படம். விமர்சகர்கள் பலரின் வரவேற்பையும் பெற்றது இப்படம்.

**9. மறைபொருள் - பொன்சுதா - இந்தியா - 5 நிமி.**
விழா முடிந்த பின்னர் சர்ச்சையை கிளப்பியுள்ளது இப்படம். ஒரு முஸ்லீம் பெண் தலைதுடைத்து தலைவாரி பொட்டிட்டு, மையிட்டு, அழகான பஞ்சாபி அணிந்து பூ வைத்து, கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துவிட்டு, பர்தா அணிகின்றாள். அதன் பின்னரும் கண்ணாடி முன் நின்று பார்க்கின்றாள். உரையாடல் எதுவுமற்ற இப்படம் தேர்ந்த ஒளிப்பதிவு, தொகுப்பு (எடிட்டிங்), நெறியாள்கை எனப்பல அம்சங்களைக் கொண்டுள்ளது. சில காட்சிப்படிமங்கள் அவளது வாழ்க்கை அந்த அறைக்குள்ளேயே அடைக்கப்பட்டுள்ளது போன்ற தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது. அவள் பர்தா அணியும் முன்னர் ஒரு சாதாரண புன்னகையுடன் காட்சியளிக்கின்றாள். ஆனால் பர்தா அணியும் போது இசை சோகமயமாக்கி இயக்குனரின் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. இயக்குனர் ஒவ்வொரு காட்சிப்படிமத்திலும் மிகவும் கவனத்துடன் தனது விமர்சனங்களைப் படைத்துள்ளார். மொத்தத்தில் வித்தியாசமான script. இப்படம் எழுப்பிய கேள்விகளுள் ஒன்று முஸ்லீம் அல்லாத ஒருவர் இப்படத்தை படைத்துள்ளார் என்பது. இப்படம் எந்த விருதையும் பெறவிட்டாலும் இவ் விழாவின் மிகச் சிறந்த பதிவுகளில் இதுவும் ஒன்று.

**10. This movie has no name (இந்த படத்துக்கு பெயரில்லை.) - ரூபன் - 4 நிமி. - கனடா**
வித்தியாசமான தலைப்புடனான ரூபனின் படமான இது ஒரு வித்தியாமான கருவைக் கொண்டது. பூக்களை ஒவ்வொருவரும் இரசிக்கும் விதம் வித்தியாசம். வயது வந்தவர்கள் பல கஷ்ரங்களால், சில சமயம் அழகிய பொருட்களை இரசிக்க முடியாமல் போய்விடும். ஆனால் குழந்தைகளுள் அப்படியல்ல. சிறப்பான ஒளிப்பதிவு. ரூபன் ஒரு தேர்ந்த கலைஞர். அவரது சிந்தனையோட்டம் வித்தியாசமானது. ரூபனின் படைப்புக்கள் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன என்பதற்கு இப்படம் ஒரு சான்று.

**11. அகரம் - ஜே. ரமேஷ் - இந்தியா - 9 நிமி.**
குழந்தைத் தொழிலாளி ஒரு பட்டறையில் வேலை செய்கின்றான். காயம் காரணமாக வேலைக்கு போகமுடியாமல், பசியின் காரணமாக முதலாளியிடம் பெற்ற பணத்தை, பள்ளிக்குச் சென்ற மேல் தட்டுச் சிறுவன் பேனா வாங்க ஒரு ரூபாய் குறையும்போது தன் உணவுக்காக வைத்திருந்த பணத்தைக் கொடுத்து உதவுகின்றான். பணத்தைக் கொடுக்கும் போது கூட பணக்காரப் பையனின் கையை அவன் தொடவில்லை. இதற்கு அங்குள்ள சாதி, வர்க்க வேறுபாடுகள் காரணமாக இருக்கலாம். சிறந்த படத்துக்கான விருதைப் பெற்றபடம். ஒரு குறும்படத்துக்குரிய கனகச்சிதமான படைப்பு. சிறந்த நெறியாள்கை. சின்னச் சின்ன விடயங்களில் கூட மிகக் கவனமாக தெளிவாக படம்பிடித்துள்ளார்கள். பள்ளிச் சூழல், சிறுவன் வாழும் உலகம் என அகம், புறம் இரண்டும் சிறப்பாக படைக்கப்பட்டுள்ளது. ஜே. ராமேஷ் சிறந்த இயக்குனருக்கான விருதையும் தட்டிக் சென்றுள்ளார். விழாவின் மற்றொரு சிறந்த பதிவு இது.

**12. செயற்கை விதி - ஜே. ரமேஷ் - இந்தியா - 4 நிமி.**
இந்திய சுற்றுப் புறச் சூழல் பற்றிய குறும்படம். வித்தியாமான முயற்சி. இவ்வாறான படைப்புக்கள் கனடியப் படைப்பாளிகளிடம் இருந்து அடுத்த விழாவில் எதிர்பார்க்கலாம்.

**13. மனசு - P.S. சுதாகரன் - கனடா - 29 நிமி.**
P.S சுதாகரனின் முதல் முயற்சி இது.



ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்ட இளைஞனின் கதை. கனடாவில் மாத்திரமல்ல, இலங்கையில் பெண்ணெடுத்தாலும் இதே நிலைமை தான் என்பதை வெளிக்காட்டியுள்ளது. மனசு தான் எல்லாம். சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றது. தெளிவான, அழகான ஒளிப்பதிவு. நம்பிக்கையுடன் சுதாகரின் அடுத்த படத்தை எதிர்பார்ப்போம்.

**14. இளிச்சவாயன் - யேசன் - கனடா - 22 நிமி.**
சிறந்த மக்களின் தேர்வு - விருது. சிறந்த தொகுப்பு (எடிட்டிங்), சிறந்த நடிகருக்கான விருது என மூன்று விருதுகளை தட்டிச் சென்றது. சமூகத்தில் புரையோடியிருக்கும் அழுக்காறுகளை பதிவு செய்துள்ளது. தலைப்பு ஏதுமற்ற அவசரமாய், ஆனால் அழகான, தெளிவான பதிவு, நேரத்தை குறுக்கியிருக்கலாம். இவர்கள் கமராவை கையாண்ட முறை ஒருசில பார்வையாளர்களை கேள்வி கேட்க வைத்து விட்டது. யேசன் பல குறும்படங்களை இயக்கியுள்ளார். கடந்த விழாவிலும் பரிசு பெற்றவர். Dreams Inside என்ற ஒரு சிறப்புக்காவியத்தை சில வருடங்களுக்கு முன்பு சமர்ப்பித்தவர்.

## சிறப்பம்சம்

- பல புதிய படைப்பாளிகள் (செல்வகுமார், சுதாகரன், பிரிஜீவி துரைராசா, வலன்ரையன் ஞானகாந்தன்)
- பெரும்பாலான படைப்புக்கள் 10 நிமிடங்களுக்கு உட்பட்டவை.
- ஒவ்வொரு படமும் வித்தியாசமான கருவைக் கொண்டிருந்தன.
- முதன்முறையாக திரைப்பட இயக்குனர்களுடன், படம் முடிந்த பின்னர், கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பெரும்பாலான இயக்குனர்கள் தெளிவாகவும், திடமாகவும் பதில் கூறினர்.
- ஆய்வுரைகள் வழங்கிய Tod Witham, Cyrus சுந்தர் சிங் நல்ல கருத்துக்களை கூறினார்கள்.

## விழாவின் நட்சத்திர முத்திரைகள்

- ரூபன் - ஒரு கறுப்பு வெள்ளை, இரண்டு கலர் குறும்படங்களை ஒளிப்பதிவு செய்து தனது பன்முகப்பரிமாணங்களை வெளிப்படுத்தியுள்ளார்.
- ஆங்கிலம் - பல படங்கள் ஆங்கில மொழி பேசின.
- அருண் வைத்தியநாதன் - அமெரிக்காவில் இருந்து ஓடோடி வந்தும் எந்த விருதும் பெறாமலும் புன்சிரிப்புடன் உலா வந்தார்.
- ஜேசன் - சிறிது நேரத்திலும் இறுக்கமான சிந்தனையோட்டத்துடன் கூடிய படத்தை அளித்துள்ளார்.
- சுமதி ரூபன் - தொடர்ச்சியாக குறும்படங்களை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ஏக்கர் நிலம் வருமானத்துடன்
வீடும் வியாபாரமும்
பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham
416.230.7820 / 905.696.7310
KENNEDY / FINCH பகுதியில் கோவில், வீதி நடைதூரத்தில் Sep .entrance Basement வருமானத்துடன் அழகான இல்லம்

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND ®

எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

*கடந்த இதழ் தொடர்ச்சி*

# கண் கோளாறுகள்

(57) கபசுரம் தீர - இருமலுடன் கூடிய சுரத்திற்கு கருவேப்பிலை ஈர்க்கு, வேப்பம் ஈர்க்கு, நெல்லி ஈர்க்கு (ஈர்க்கு என்றால் இலையை உருவியதும் வரும் காம்பு) இவை ஒவ்வொன்றும் இருபது எடுத்து துண்டுகளாக நறுக்கி ஒரு சிறுபானையில் போட்டு இத்துடன் சுக்குதூள் ஒரு தேக்கரண்டி, மிளகுதூள் ஒரு தேக்கரண்டி, பெருஞ்சீரகத்தூள் ஒரு தேக்கரண்டி, நற்சீரகத்தூள் ஒருதேக்கரண்டி போட்டு மூன்று கிளாஸ் தண்ணீர்விட்டு ஒரு கிளாசாக வற்ற காச்சி வடிகட்டி எடுத்து இந்தக்கசாயத்தை தேனுடன் ஒரு தேக்கரண்டி தினம் மூன்றுவேளை குடித்தால் இந்த சுரம் குணமாகும்.

(58) கண்வலிக்கு - கொவ்வை இலையை எடுத்து கழுவிச்சுத்தம் செய்து அதைத்துவைத்து சாறு எடுத்து வலிஉள்ள கண்ணிற்கு விட்டால் வலி நீங்கும். கடும் ஒளியைப்பார்ததால் ஏற்பட்ட வலிக்கு வெந்நீரில் கழுவி சுத்தம்செய்த வாழைப் பழத்தை துண்டுகளாக நறுக்கி கண்ணுக்கு மேல்வைத்து கட்டினால் வலி குறைந்துவிடும். இதேபோல் உருளைக்கிழங்கையும் சுத்தி செய்து சிறுதுண்டுகளாக அரிந்து கண்ணுக்கு மேல்வைத்து கட்டினால் வலி குணமாகும். ஒரு முட்டையை அவித்து அதன் மஞ்சள்கருவை எடுத்துவிட்டு வெந்த வெள்ளைக்கருவை கண்ணின்மேல் வைத்துக்கட்டினாலும் வலி குணமாகும். ஆடாதோடைப்பூவையும் சுத்தம் செய்து கண்ணின்மேல் வைத்துக்கட்டினால் வலி குணமாகும். விற்ரமின் 'ஏ' கூடுதலாக உள்ள உணவுகளான பொன்னாங்காணி, கரற், கீரைவகை, மீன் எண்ணை இவற்றை அதிகம்பாவித்தால் கண்ணில்வரும் நோய்கள் விரைவில் குணமாகும், நோய்களைத் தடுக்கலாம். கண்கோளாறு உள்ளவர்கள் பொன்னாங்காணி, முள்ளங்கி, கரிசலாங் கண்ணி, கரற் விற்ரமின் 'ஏ' உள்ள உணவுகளை உண்பது அவசியம்.


**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D**
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com


**பரம்பரை வீட்டு வைத்தியம்**

(59) கண்ணில் பூவிழுந்தால் - கண்ணில் பூவிழுவதை தடுக்க பனங்குருத்தை சுத்தம்செய்து சாறுபிழிந்து கண்களில் விட்டால் பூவிழுவதை தடுக்கலாம். மல்லிகைப்பூக்களை சுத்திசெய்து அதைப்பிழிந்து சாறு எடுத்து பூவிழுந்த கண்களுக்கு விட்டால் விரைவில் குணமாகும். கண்களில் ஏதாவது பட்டு வலி, இரத்தம் வந்தால் உடன் சேவல்கோழியின் சூட்டை அறுத்து அந்த இரத்தத்தில் மூன்று துளி விட்டால் குணமாகும். இதேபோல் இருவாட்சிப்பூவை யும் கசக்கி பிழிந்து சாறு எடுத்து விட்டால் இரத்தம் வருவது நின்றுவிடும். கொத்தமல்லி கஷாயத்தால் கண்களை கழுவிவந்தால் பூவிழுவதை தடுக்கலாம். பெரும்பாலும் அம்மை நோய் வந்தவர்களுக்கு இப்பரிகாரம் செய்து வந்தால் பூவிழுவதை தடுக்கலாம். இவற்றை ஆரம்பத்திலிருந்தே செய்தால் நற்பலன் கிடைக்கும் அல்லது அறுவைச்சிகிச்சை செய்தே குணமாக்க முடியும்.

(60) கண் இமை வீக்கத்திற்கு - கண் இமை வீக்கத்திற்கு பலகாரணங்கள் உண்டு, உண்டிக்காய் நோய், காமாளை நோய் கல்லீரல் நோய் ஆகியவற்றிற்கும் வீக்கம் தோன்றலாம். அவ்வாறாயின் அவற்றிற்கு ஏற்ற வைத்தியம் செய்ய வேண்டும். சாமானியமான உஷ்ணத்தால் வீக்கம் தோன்றில் பசும்பாலை நன்கு காய்ச்சி ஆறியதும் சுத்தமான துணியை அதில் தோய்த்து கண் இமைக்கு ஒற்றடம் கொடுத்தால் வீக்கம் வற்றிவிடும். புன்னைப்பூக்களை நீரில் ஊறப்போட்டு அந்த நீரால் கண்களைக்கழுவினால் வீக்கம் குணமாகும். உருளைக்கிழங்கை சுத்தம்செய்து மசிய அரைத்து வீக்கத்தின் மேல்வைத்துக் கட்டினால் வீக்கம் குணமாகும்.

(61) கண்கட்டிக்கு - தாய்ப்பாலும் இரண்டு சொட்டு விளக்கெண்ணையும் கலந்து கட்டிமேல் தடவினால் கட்டி குணமாகும். கண்ணில் தூசி விழுந்தால் கண்ணை கசக்காது வெண்ணை இரண்டு சொட்டு விட்டு சொற்பநேரம் கட்டிவைத்தால் தூசி அகன்றுவிடும். திருநீற்றுப்பச்சை இலையைச் சுத்தம் செய்து அந்தச்சாற்றில் சிலதுளிகள் கண்கட்டிமீது பூசினால் கட்டி கரைந்து விடும். இதேபோல் செஞ்சந்தணத்தையும் அரைத்துப பூசினால் கட்டி கரைந்துவிடும்.

(62) கண்சிவப்பு நீங்க - மல்லிகைப்பூவை நசுக்கி அதன்சாறை இருதுளிகள் கண்களுக்கு விடச்சிவப்பு நீங்கும் இதேபோல் புளியம்பூவை அவித்து ஆறியதும் கண்ணுக்கு ஒத்தடம்



கொடுத்தாலும் சிவப்பு நீங்கும். நந்தியாவட்டம் பூவை சுத்தம்செய்து கசக்கி பிழிந்து கண்களுக்கு இரண்டுசொட்டு விட்டால் சிவப்பு நீங்கும். பொன்னாங்காணி சாறும் நல்லெண்ணையும் சேர்த்து தைலம் வடித்து இதை தலைக்கு தேய்த்து முழுகி வந்தால் கண்களில் ஏற்படும் பல கோழாறுகளும் குணமாகும், சிவப்பும் நீங்கும்.

(63) கண்ணாடி குத்தினால் - கண்ணாடி குத்தினால் தசைக்குள் துகள்கள் இருந்து வேதனை செய்யும். இதை வெளியே எடுப்பதற்கு ஓமத்தை வெல்லத்துடன் அரைத்து குத்திய இடத்தில் வைத்துக்கட்டினால் விரை வில் துகள்கள் வெளிவந்துவிடும்.

(66) கருந்தேமலுக்கு-கற்பூரவள்ளி இலை, திருநீற்றுப்பச்சை இலை இவற்றை அரைத்து அவ்விடத்தை வெந்நீரால் கழுவி அதன்மேல் இந்தக்களிம்பை பூசிவந்தால் சிலநாட்களில் கருந்தேமல் குணமாகும்.

(67) காலில் ஆணிக்கு - அம்மான்பச்சை என்னும் செடியின் காம்பை ஒடித்தால் அதிலிருந்து பால் வரும் அந்தப்பாலை காலை, மாலை கால் ஆணியின்மேல் தடவிவந்தால் கால் ஆணி குணமாகும்.




**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4


18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 178

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | ■ | 3 | 4 |
| | ■ | ■ | ■ | | ■ | | 5 |
| | 6 | 7 | ■ | | 8 | ■ | |
| ■ | | | 9 | ■ | | ■ | |
| 10 | ■ | | ■ | 11 | | 12 | ■ |
| ■ | 13 | | | | ■ | | ■ |
| | ■ | ■ | ■ | ■ | ■ | 14 | |
| 15 | | | | | | ■ | ■ |

**இட - வல**
1. புரட்டாதி மாதம் இராணுவப்புரட்சி நடந்த நாடு
3. பிழிந்து எடு
5. நன்கு அரை (வல-இட)
7. பக்குவம் (வல - இட)
8. எரி (வல - இட)
9. குமரி (வல - இட)
10. கொடு
12. ஓடம் (வல - இட)
13. பெருமழை
14. பொறுமை
15. புட்டு அவிக்க, நீர்வடிக்க உதவும்

**மேல் - கீழ்**
1. ஒரு விளையாட்டு
2. கூறு
3. உருகு
4. இஸ்லாமியர்களின் புனித மாதம்
6. நிகரற்றிரு
7. பனை மட்டையின் ஒரு பகுதி
8. முருகன் ஔவைக்கு இப் (பெயரெச்சம்) பழம் கொடுத்தார்
11. மனமிளகு
12. பல் மினுக்க உதவுவது
15. சாம்பல் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வி | லா | று | ■ | ■ | அ | ரி |
| ர் | கா | ■ | கா | ர | ண | ம் | ■ |
| க் | ■ | ■ | க் | ■ | ■ | மி | உ |
| க | ■ | க | ழ | னி | ■ | ■ | டு |
| ம் | க | ட | வ | ■ | ம் | ■ | ப் |
| ■ | ■ | ல் | ■ | ■ | ன | ■ | பு |
| றை | தி | ■ | ஒ | வி | ய | ம் | ■ |
| மு | க | மா | லை | ■ | ச | ■ | தீ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் October 27, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**178 இல் வெற்றி பெற்றோர்**
1) P. Mahathevan, Donmills
2) S. Mahendran, Mississauga


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# எம்மைப்பற்றிய பூரண புரிந்துணர்வு



எம்மில் பலருக்கு எம்மைப்பற்றிய பூரண புரிந்துணர்வு இருப்பதில்லை என்பது வேதனை தரும் உண்மை. ஏதாவதொரு பிரச்சினையை உருவாக்கி, அதைத் தீர்ப்பதால் தான் எனக்கு மனத்திருப்தி ஏற்படுத்துகின்றது எனும் உண்மையை உணர்ந்து, இன்று நான் அதை ஒப்புக்கொள்கிறேன்.

எம்மிடையே பலவிதமானவர்கள் இருக்கிறார்கள். சிலர் துன்பத்தைத் தேடி நாடியோடுவார்கள். சிலர் துயரத்தை உருவாக்குவார்கள். எந்த விடயமானாலும் சரி, அதில் ஏதாவதொரு பிழை அகப்படாவிட்டால், சிலருக்கிச் சரிப்பட்டுவராது. தாம் குறைப்பட்டு அழுது வடிந்து கொண்டிருக்க ஏதாவதொரு துன்பமோ பிரச்சினையோ இருக்காவிட்டால், சிலருக்கு தூக்கமே வராது! நீண்டகாலப்பிரச்சினையால் துயரம் அனுபவிப்பது, சிலசமயங்களில் சிலருக்குப் பழக்கப்பட்டு, அத்துன்பமே அவர்களை அடிமைப்படுத்திவிடும். அந்தப்பிரச்சினை இல்லாது வாழவே முடியாது என்ற நிலை கூடத் தோன்றலாம்!

மற்றவர்களுடன் பேசிப் பகிர்ந்துகொள்ள உங்கள் பிரச்சினை உங்களுக்கு ஒரு சுவாரசியமான விடயமாகி விடுகிறது. உங்கள் பிரச்சினை உங்களை ஒரு முக்கிய நபராக்கி விடுகிறது. “எனது சாமர்த்தியத்தினால் வாழ்வின் எந்தவிதமான சவாலையும் என்னால் எதிர்நீச்சலிட்டுச் சரிவரச் சமாளிக்க முடியும்” என மற்றவர்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்கே கூட எடுத்துக்காட்டிட சிலவேளைகளில் உங்கள் துன்பத்தை நீங்கள் உபயோகிக்க கூடும். உங்கள் மனத்துயர் அல்லது உடல் உபாதை மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பது உங்களுக்குப் பிடித்திருக்கலாம். உங்களுக்குத் துன்பம் நேர்கையில், மற்றவர்கள் உதவ ஓடி வருவார்கள் அல்லவா? அவ்வாறு மற்றவர்கள் உதவ முன்வராவிட்டால் அதுகூட உங்கள் துயரைக் கூட்டும். உங்களுக்குத் துன்பம் என்றால் விருப்பமில்லைதான். ஆனாலும் துன்பம் ஏதாவதொரு செயற்பாட்டிற்கு உங்களைத் தள்ளுகின்றதல்லவா? நீங்களும் ஏதாவதொன்றைச் சதா செய்து கொண்டிருக்க வேண்டுமல்லவா?

அன்பானவர்களே! துன்பத்திற்கு மேல் துன்பம் அனுபவிப்பது தான் வாழ்வு என ஒருபோதும் நினைக்க வேண்டாம். இத்தகைய பாரத்தைச் சுமக்கிறேன் என மனம் நொந்து வெதும்பியபடி வாழ்வதற்கு இறைவன் எம்மைப் படைக்கவில்லை. அப்படி வாழவும் தேவையில்லை. வாழ்வில் உனக்குக் கிடைத்திருக்கும் ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்த்து நிம்மதி பெறு. துன்பம் இருக்காவிட்டால் பயம் பறந்தோடி விடும்.

பயமில்லாமல், துயரத்தை துரத்திவிட்டு, இத்துன்பம் மீண்டும் வரக்கூடும். திரும்பி வந்தால் வரட்டும், பரவாயில்லை என்ற மனத்திருப்தியுடன் ஜீவிக்கப்பழகு. அப்போது மற்றவர்களுக்கும் எம்முடன் கூடிப் பழகுவது சுலபமாயிருக்கும். மற்றவர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கவேண்டிய கவனிப்பும் புரிந்துணர்வும் எமக்குக் கிட்டும். இப்படிப்பட்ட நேரங்களில் தான், வாழ்வை ரசிப்பதற்கு, எமக்குத் துன்பம் அத்தியாவசியமானதல்ல என்பது எமக்குப் புரிகின்றது.

உனது மனவேதனை, உன் வாழ்வில் வகிக்கும் முக்கிய பங்கு இதுவரை உனக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். உன்னை அறியாமலே, நீ எப்படி பிரச்சினைகளைத் தேடி ஓடுகிறாய், உருவாக்குகிறாய், பின் மனவேதனைப் பட்டுகிறாய் என்பதை அலசி ஆராய இதோ இப்போ நேரம்

## ஆளுமை (86) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

வந்து விட்டது. இப்போது உனக்கிருக்கும் துன்ப நிலைமை, துக்க அநுபவங்கள் யாவற்றையும் கவனித்துச் சீர்தூக்கிப் பார். இவற்றையெல்லாம் நான் எப்படி சகித்துக்கொண்டு வாழப் போகிறேன் என்ற கேள்வியை உன்னிடமே நீ கேட்டுக் கொள். தயவு செய்து உனது பதில்களை ஒரு காகிதத்தில் எழுது. அதை வாசித்த பின் இதை நான் இன்னும் கூடிய அமைதியுடனும் அன்புடனும் எப்படி அணுகலாம் என்று உன்னையே கேட்டுக் கொண்டு அலசி ஆராய்ந்து முடிவெடு.

துன்பமில்லா வாழ்வினைத் தவிர்ப்பதும் உருவாக்குவதும் எனது கைகளில் தான் தங்கியுள்ளது. இன்பவாழ்வை நோக்கிப் பயணிக்க இன்று முதல் தீவிர முயற்சியுடன் ஈடுபட ஆரம்பிக்கின்றேன்.

*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள்* 905-270-1214



லலிதா புரூடி

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade
- One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574


416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# இதயத்தின் இறுதி விருப்பம்

## ஓடும் நீர் உறைவதில்லை 21

நமது பிறப்பில் இருந்து இறப்புவரை எண்ணிலடங்காத அளவு விருபங்களும் விருப்பம் இன்மைகளும் இடம்பெறுகின்றன. ஒவ்வொருவரது விருப்பு வெறுப்புக்கள் அவரவர் வாழ்வியல் நிலைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒருவரது விருப்பம் இன்னொருவருக்கு விருப்பமாகவோ அல்லது விருப்பமற்றதாகவோ அமையலாம். விருப்பம் எனும்போது ஒருவருக்கு ஒன்றின் மீது உள்ள பற்று, ஆசை அல்லது ஆர்வம் என்று பொருள் கொள்ளலாம். இந்த விருப்பங்களில் பல எமது உளவியல், உடலியல் மாற்றங்களுக்கேற்ப மறைந்து விடுவனவாக அல்லது மாறுபாடு உடையனவாக அமைகின்றன.

KG Master
416.725.5112

ஒரு காலத்தில் சில விருப்பங்கள் நிலையானவையாக எமக்குத்தோன்றும். அவை நமது இறுதிநாள்வரை நீடிப்பனவாகக் கூட எண்ணுவதுண்டு. இப்படிப்பட்ட விருப்பங்களில் பல வாழ்க்கை மாற்றங்களால், வயது முதிர்ச்சியால், உடல்நிலை மாற்றத்தால் கைவிடப்பட வேண்டியனவாக அமைவதுமுண்டு. உதாரணமாக இனிப்புப்பண்டம் ஒரு குழந்தைக்கு மிகவும் விருப்பமானது. இந்த விருப்பம் சிலருக்கு குழந்தைப் பருவத்தில் இருந்து நீண்டகாலத்திற்கு விருப்பம் உடையதாக அமையும். காலப்போக்கில் உடலியல் மாற்றங்கள் காரணமாக அந்த விருப்பத்தைக் கைவிட வேண்டிய நிர்பந்தங்களும் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சில விருப்பங்கள் மனதளவில் இருந்தாலும் செயற்பாட்டளவில் நடைமுறைப்படுத்த முடியாத நிலையும் ஏற்படுகின்றது. விருப்பங்கள் நிலையற்றனவாயும் அவை கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப மாற்றப்பட வேண்டியனவாகவும் அல்லது கைவிடப்பட வேண்டியனவாகவும் அமைவதால் எந்த விருப்பம் இறுதிவரை இதயத்தில் இறுக்கமாக்கப்பட்டு எடுத்துக்செல்லப் படுகின்றது என்ற கேள்விக்கு விளக்கம் தருவதே இக்கட்டுரையின் நோக்கம். இறுதிவரை இணைபிரியாது இதயத்துடன் பிணைக்கப்பட்டு இதயத்தின் துடிப்புகள் ஓய்கின்றபொழுது வெளிப் படுத்தப்படும் இந்த விருப்பத்தை நாம் வாழும் நாட்களில் உணர்பவர்களாகவே அல்லது உடல் தென்பாக இருந்த போது அதற்கான பிரதி உபகாரத்தைச் செய்பவர்களாகவோ நடந்து கொள்வதில்லை என்பது தான் வாழ்வியல் அனுபவங்களில் பெரும்பாலானவர்களது வெளிப்பாடு.

இதயத்தின் இறுதிவிருப்பம் மண்ணாசையாக இருக்கமுடியாது. மண்ணின் மீது அளவுகடந்த ஆசைகளை வாழும்போது கொண்டவர்கள், இந்த மண்ணின் மீதான அளவுகடந்த பற்றுதலால் உற்றம் உறவு அத்தனையையும் பகைத்தவர்கள், உடம்பு தென்பாக இருந்த போது மற்றவர்களின் மண்ணையும் தனதாக்கி மார்புதட்டியவர்கள் அனைவரும் மண்ணால் ஆளப்பட்டு ஆறடிக்குள் அடங்கிப் போய்விடுவார்கள். மண்ணாசையில்லாதவர்களும் மண்ணால் ஆளப்பட்டு ஆறடிக்குள் அடக்கப்படுகிறார்கள். ஆனால் இரண்டுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடுண்டு. மற்றவர்களின் மண்ணைச் சொந்தமாக்கியவனுக்கு ஆறடி ஒரு தண்டனை. மாறாக மண்ணாசையற்றவனுக்கு அந்த ஆறடி பூமித்தாயின் ஓர் அன்பளிப்பு. எனவே மண்ணாசை அல்லது மண்ணின் மீதான விருப்பம் ஒருவரது இறுதிவிருப்பமாக இருப்பதில்லை. உயிர் ஊசலாடும் போது, இறுதி மூச்சுக்களை நெருங்கும்போது ஒருவரும் எத்தனை ஏக்கர்காணி தன்னிடம் இருக்கிறது என்றோ அல்லது என்னிடம் ஒரு அடி நிலம் கூட இல்லையே என்றோ எண்ணுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் ஒருவரது உயிர்பிரிவதற்கு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் போது மண்ணாசையாக இருக்குமோ என்று எண்ணி சிறிதளவு மண்ணைக் கரைத்து வாயில் ஊற்றுவார்கள். அந்த மனிதனோ அதையும் குடித்துவிட்டு தொடர்ந்தும் மூச்சை இழுத்துக்கொண்டே இருப்பார். அதாவது மண்ணின் மீதான ஆசையல்ல ஓர் இதயத்தின் இறுதி விருப்பம்.

மண்ணாசையைவிடப் பொன்னாசை கொண்டவர்கள் கோடானகோடி. திரைகடல் ஓடிய் திரவியம் தேடுபவர்களும், திருட்டுத்தனமாகத் திரவியம் தேடுபவர்களும் இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்பவர்களுமாக பலதரப்பட்டவர்கள் வாழ்கின்றார்கள். காசு, சொத்து என்று கட்டுக்கடங்காத ஆசைகளால் கால்நடை-களாக மாறுபவர்களும், காசேதான் கடவுள் என்று கும்பிடுபோடுபவர்களும் உள்ளம் சாக்கடையானாலும் உடுப்பும் எடுப்பும் உயர்ந்தவனாக்கட்டும் என்று போலியாக வாழ்பவர்களும் இறுதியில் ஒவ்வொரு மூச்சும் இறுக்கமானதாகவும் பராமானதாகவும் உணரப்படும்போது இந்தப் பொன்னாசை கூடப் பொடிப் பொடியாகிவிடும். மண்ணைக் குடித்துவிட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு சிறிதளவு பொன்னைக் கரைத்து வாயில் ஊற்றுவார்கள். அதையும் குடித்துவிட்டு இன்னும் போராடிக் கொண்டிருப்பார். எனவே இதயத்தின் இறுதி விருப்பம் மண்ணும் இல்லை, பொன்னும் இல்லை. அப்படியாயின் எது இதயத்தின் இறுதி விருப்பம்?

தாயகத்தில் திருவிழாக்காலங்கள் என்றால் தனிச்சிறப்பு. குறிப்பாக என்னைக் கவர்பவை இசைக்கச்சேரிகள், மேளச்சமாக்கள், வில்லுப்பாட்டுகள் எனப்பல. ஒருமுறை வில்லுப்பாட்டுக் குழுவினரின் நிகழ்ச்சியொன்றில் கூறப்பட்ட விடயம் ஒன்று அப்போது சிரிப்பதற்கு வாய்ப்பைக் கொடுத்திருந்தாலும் வாழ்வியலில் அடுத்தடுத்த நிலைகளுக்கு நாம் செல்லுகின்ற பொழுது நம்மைச் சிந்திக்க வைப்பதாகவும் அமைகின்றது. அந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் ஒருவருக்கு மூன்று ஆசைகள் உண்டு என்றும் அது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்றும் கூறி, இதில் பெண்ணாசை தான் இறுதிவரை நிற்பது என்று ஒரு கதை கூறப்பட்டது. அதாவது ஒருவர் தனது இறுதிக் கட்டத்தை அண்மித்துவிட்டார். உயிர் பிரிவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறது. மண்ணைக் கரைத்து ஊற்றினார்கள். பொன்னைக்கரைத்து ஊற்றினார்கள். பலன் கிடைக்கவில்லை. உடனே மூத்தமகன் தந்தையின் காதில் மெதுவாக கேட்டானாம்; அப்பு! "உங்கட கடைசி ஆசை என்னவென்று". உடனே அப்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரையும் தனக்கருகே வரச்சொல்லி விட்டு மூச்சை இன்னும் அழுத்தமாக இழுத்துக் கொண்டிருந்தார். "அப்பு என்னவென்று சொல்லுங்கோ" என்று சுற்றி நின்றவர்கள் அழுதுகொண்டு கேட்டபோது தடுமாறிய குரலில் அப்பு சொன்னாராம் "ஆச்சியை கண்கலங்கவிடாதீங்கோ" என்று அத்துடன் அப்புவின் உயிர் பிரிந்துவிட்டது. இங்கே பெண்ணாசை தான் இதயத்தின் இறுதிவிருப்பம் என்று அந்த நிகழ்ச்சியில் நகைச்சுவையாகக் கூறப்பட்டது. சிறுவனாக இருந்தபோது நானும் சிரித்துவிட்டுப்போய் விட்டேன். இப்போது சிந்தித்துப்பார்க்கும போது அதற்கானவிடை கிடைக்கிறது. பெண்ணாசையல்ல அது. தன்னை நேசித்த அந்த ஜீவனின் உள்ளம்தான் அது. ஆமாம். ஒரு இதயத்தின் இறுதிவிருப்பம் தன்னை நேசித்தவர்களும் தன்னால் நேசிக்கப்பட்டவர்களும் நன்றாக வாழ வேண்டும் என்பது தான். அப்புவின் விடயத்தில் அவர் மனைவி. மற்றவர்கள் விடயத்தில் எவராகவும் இருக்கலாம். நிச்சயமாக அவர்கள் தூய மனத்துடன் நேசித்தவர்களாகவும், நேசிக்கப்பட்டவர் களாகவும் இருப்பார்கள். இந்த உண்மை நிலையானது. எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவரது இறுதிவார்த்தை எனது பெயராக இருந்ததாகக் கூறினார்கள். உண்மையில் அவரை என் குருவாக நான் நேசித்தேன். அவரும் என்னை ஒரு சிஷ்யனாக நேசித்தார்.

ஆம் வாசகர்களே! நிச்சயமாக நமது உள்ளத்தின் இறுதிவிருப்பம் நம்மை நேசித்தவர்களும் நம்மால் நேசிக்கப்பட்டவர்களும் தான். ஒரு குடும்பம் என்ற வரையறைக்குள் அப்புவுக்கு ஆச்சியும் ஆச்சிக்கு அப்புவாகவும் அமையாலம். ஆனால் குடும்பம் என்ற நிலைக்கு அப்பால் எத்தனையோ ஆன்மாக்கள் நேசிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளார்கள். அன்பையும் ஆதரவையும் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். தூய உள்ளத்துடன் தேடிப்போனால் எண்ணற்றவர்கள் உங்களால் நேசிக்கப்படுவார்கள். அவர்களது இதயத்தின் இறுதி விருப்பம் நீங்களாக இருப்பீர்கள். இது என்றும் அழியாத உண்மை.




## ஆரோக்கிய வாழ்வை நோக்கி ஒரு பயணம்

வசந்தத்தின் வருடாந்த கருத்தரங்கு வரிசையில், இவ்வருடம் தமிழ் சமூகமும் உளநலமும் விடயத்தில் ஆரோக்கிய வாழ்வை நோக்கி ஒரு பயணம் எனும் தலைப்பில் ஒரு நாள் விளிப்பூட்டல் கருத்தரங்கை நடத்த வசந்தம் தமிழ் முதியோர் உளவளத்துணை நிலையம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.
தமிழ் சமூகத்தின் எல்லாத் தலைமுறையினருக்கும் ஏற்ற வகையில் பல்துறை ஆய்வறிவாளர்கள் கருத்துரையாற்றும் தினநிகழ்வு இது.

இடம்:- ஸ்காபரோ சிவிக் சென்ரர் திகதி:- 2006 ஐப்பசி 21 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.30 - மாலை 3.00

கலந்துரையாடப்படும் விடயங்கள்
• மகப்பேறுகாலத்தின் பின்னரான மனவிரக்தி • தற்கொலையும் அதனோடு தொடர்புடைய மனப்பிறழ்வும்
• கோபத்தையும் ஆத்திரத்தையும் வழிப்படுத்தல் • இளைஞர்களிடையேயான வன்முறைகள்
• தமிழ் சமூகத்திலே நிலவுகின்ற குடும்ப வன்முறைகள்

வழமை போல் பல்வேறு இடங்களில் இருந்து போக்குவரத்திற்காக பேரூந்து வசதிகள் எற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவச சிறுவர் பராமரிப்பு முற்பதிவின் அடிப்படையில் வழங்கப்படும். காலை உணவு, மதிய உணவு வழங்கப்படும். மேலதிக தகவலுக்கும் பதிவுகளுக்கும் 416 324 4185 எனும் இலக்கத்தில் சேரரவையும் றாஜினியையும் வசந்தத்தில் அழையுங்கள்.

அனைத்தும் இலவசம்! அனைத்தும் பிரயோசனம்! அனைத்தும் ஆரோக்கியம்!





கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*



வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket
(17 Years Insurance Claims Experience)
416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



156

நகைச்சுவைத் தொடர்


# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

கல்வியா செல்வமா வீரமா

கோபம் கோபம் கோபம். தீராக்கோபம் போராய் முடியும்.





கோயில்களில் கதாப்பிரசங்கம் நடக்கிறதோ இல்லையோ. உலகர் வீட்டில் காலத்துக்கு காலம் கதா காலேட்சபத்திற்கு குறைவில்லை. அவ்வப்போது தலையங்கம் மாறும்.

அன்னம்மா! அருச்சுனன் விஜயதசமியன்று தனது ஆயுதங்களைப் பூசைக்கு வைத்து வணங்கி போருக்கு எடுத்துச்சென்றான் போரில் வெற்றிபெற்றான்.

ஆய்த பூசைக்கு உழவர் ஏர், மண்வெட்டி போன்றவற்றையும் கலைஞர்கள் தங்கள் கலைப்பொருட்களையும் பூசைக்கு வைப்பார்கள்.
**ஆனால் இன்று கத்தி, துவக்கு, ராங்கர், ஆட்டிலறி போன்றவற்றை வைத்து பூசை செய்ய நினைக்கிறார்கள்.**

கல்வி கற்கும் பள்ளிக்கூடங்களில் வீடிழந்த அகதிகள் செல்வம் சேர்த்தவர்களெல்லாம் ஒரு நேரச்சாப்பாட்டிற்கு படும்பாடு.
நிராயுதபாணிகள் ஆயுதமற்ற பாலகர், சிறுவர், பெண்கள், முதியவர்களிடம் ஆயுதம் தாங்கியவர்களின் வீரம்.
ஒரு சூரனை அழிக்க ஒன்பது நாட்கள், அழியவேண்டிய சூரன்கள் எத்தனை?.

உலகநாடுகளிலுள்ள தலைவர்களின் தேவையற்ற கோபம். அதன் விளைவுகள்?.





கோபத்தின் விளைவுகள் பலவிதம்.
தீராக்கோபம் போராய் முடியும்.
கோபம் வந்தால்..... நாய் கடிக்கும்
பாம்பு விசம் கக்கும்
குதிரை முன்னங்கால் பின்னங்கால் இரண்டாலும் உதைக்கும்
முள்ளுப்பன்றி முள்ளைச்சிலுப்பும்
தேள் குளவி போன்றவை கொட்டும்
திருக்கை வாலால் பதம்பார்க்கும்
பதுங்கிய பின் புலி பாய்ந்து தாக்கும்
யானை காலால் மிதிக்கும்
ஆனால் மனிதன்?





பராசக்தி, பண்டாசுரனுடன் போரிட்டு பத்தாம் நாள் அவனை வதம் செய்தாள். அதுதான் விஜய தசமி. சூரனை அழித்தது.


ஒருவரின் கோபத்தில் ஒருவர் அழிக்கப்படுவதால் பலருக்கு லாபமெனில் அதில் ஒருவரும் கவலை கொள்வதில்லை.

இந்த அமளிதுமளிக்குள் ரிவியில் நடிகை பத்மினியின் மரணச்செய்தியும் வரலாறும்....




நலந்தானா நலந்தானா உடலும் உள்ளமும் நலந்தானா. இந்தப்பாடல்வரிகளைக் கேட்கும்போது தில்லானா மோகனாம்பாள் படத்தில் நடிகர்திலகம் சிவாஜிகணேசன், ஏ.வி.எம். ராஜன் நாதஸ்வரமும் நாட்டியப்பேரொளி பத்மினி பலரின் கண்முன் ஆடுவதும் தெரிகிறது. பலர் மனதை நடிப்பாலும் நாட்டியத்தாலும் கவர்ந்த பத்மினியை கலைவாணி நவராத்திரி தினம்பார்த்து அழைத்துவிட்டார்.

நலந்தானா! நலந்தானா!
இந்த வரிகள் சாதாரண வரிகளா?
அதுமட்டுமல்லாமல் இன்ரநெற், ஈமெயில் இல்லாத காலத்தில் பாடசாலைச்சிட்டுக்கள் பாடசாலை வாசல்களில் நின்று நலந்தானா நலந்தானா பாடி ஆசிரியர்களிடம் பிரம்படி வாங்கி உடலும் உள்ளமும் புண்ணானவர்கள் எத்தனை பேர்.



இருமலர்கள் படத்தில் மன்னிக்க வேண்டுகிறேன் பாடலும் காதலன் காதலி பொய்க்கோபம் கொண்டபின் கண்களால் அல்லது கடிதத்தில் சொல்லும் வார்த்தைகள் எல்லாம் பத்மினி நடித்த படங்கள்தான்

உலகண்னை இந்தமுறை புரட்டாதிச்சனி நாலு நாளோ அஞ்சு நாளோ என்றபடி வந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா. எப்பிடி எரிச்சாலும் சனியன் எங்களை விடாது.



தைப்பொங்கலில்லை, வருசமில்லை, பெரியவெள்ளியில்லை, உயிர்த்தஞாயிறு இல்லை, தீபாவளியில்லை, றம்ழான் இல்லை எப்பவும் குண்டுவெடிப்பும் ஆள்கடத்தலும் கொலைகளும் என அமெரிக்க வெளிநாட்டுப்பிரதிநிதி கொண்டலீசா பேசியதுபோல பேசிமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகப்பு உலகப்பு இண்டைக்கு கோயில்லை என்ரை பிறண்டின்ரை சிஸ்ரருக்கு தமிழ் ஏடு தொடக்கினவை.
நெக்ஸ்ற் வீக் எங்களுக்கு தாங்ஸ்கிவிங் கொலிடே என்றபடி வந்தான் பிறிம்லி மீனாவின் மதன்.

இருந்தாலும், உலகரின் சிந்தனைகள் அன்றாடம் நடக்கும் போர், கொலைகள் பற்றியே...
ஊர் இரண்ட்டுபட்டால் கூத்தாடிக்கு சந்தோசம் என்று சொல்வார்கள்.
ஒரு நாட்டு மக்களை கூறுபடுத்தி இன, மத, மொழி பேதங்களை உருவாக்கி இருவருக்கிடையில் ஏற்படும் சண்டையை இனங்கள், மதங்கள், மொழிகளுக்குள் திணிப்பதன் விளைவு உயிர்கொலை அழிவு, உயிர்ச்சேதம் அழிவு.



உலக நாடுகள் இன்று மேக்கப் இன்றி பல நாடகங்களை செய்து வருகின்றன. இதுவரை அரபுநாடுகளையும் அங்குள்ள மதங்களையும் பயங்கரவாதம் என்று சொன்னவர்கள் இன்று இந்து பயங்கரவாதம் என்று நடாகம் நடத்துகிறார்கள்.
ஆனால், அனல் வாதம், புனல் வாதம், சுரவாம்... இதற்குள் எதிர் நீச்சல்போட்டு மேலெழுந்த சமயங்களை அழிக்கவும் பல் கலாசார சூழலில் ஒவ்வொரு நாட்டிலும் நட்பாக பழகும் மக்களை பிரிக்கப்பார்ப்பதும் பயங்கரவாதமே.



HomeLife HIGHER STANDARDS

Win A Brand New Toyota Corolla



Buy or Sell properties thru me or our "Real Team" and you will have a chance to win one of many prizes**

Neilson/Sheppard



Asking: $159,000
3Bedrooms, 2washrooms condominium. Laminate Floor Thru out. Close to all amenities

Morningside/Sheppard




Asking: $ 269,000
3 Bedroom Detached Home. 3Washrooms. 1 Br Basement apartment with Sep.Entrance

Meadowvale/Lawrence




Asking: $ 529,000
Detached House with 4+3 Bedrooms and Finished Basement. Hardwood Floor Thru out.

1st Prize
2007 Toyota Corolla



Kethees K. Seevaratnam
Sales Representative
416-275-5788

Oshawa




Asking: $ 110,000
Convenience Store in a Demand Oshawa Area. Gross Sales 500k per annum plus Lotto 6/49 Commission. Low Rent—$1640.

McCowan / 16th Ave



Asking: $ 169,000
Convenience / Grocery Store at a prime Location. Grocery including Meat & Fish ,Lotto 6/49, ATM & Western Union.

Neilson/Sheppard



Asking: $ 234,000
3 Bedroom Semi Detached House - 1 Bedroom Basement Apartment With Separate Entrance

WIN



REAL TEAM

HomeLife/GTA Realty Inc. Brokerage*, 1711 McCowan Road, Scarborough, On, M1S 3Y3 Tel: 416-321-6969

Some conditions may apply** This is not intended to solicit the properties currently listed for sale. *Each office independently owned and operated Vehicle may not be as illustrated

# “தமிழ் சினிமாக்காரர்களுக்கு காதல் மட்டுமே தலையாய பிரச்சினையாக இருக்கிறது”

## நேர்காணல்:இயக்குநர் மகேந்திரன்

தமிழ்த் திரைப்படத்துறைக்கு எழுபத்தைந்து வயதாகிறது. இந்த எழுபத்தைந்து வருட தமிழ்த் திரைப்பட வரலாற்றில், குறிப்பிடும் படியான ஒரு முக்கிய நிகழ்வு இயக்குனர் மகேந்திரனின் வருகைக்குப் பிறகுதான் தமிழ்த் திரைப்படம் யதார்த்த சினிமாவை நுகர ஆரம்பித்தது. இவ்வகையில் தமிழ்த் திரைப்படத்துக்குள் மட்டுமல்லாமல் தமிழ் கலாசார வாழ்விலும் மகேந்திரனுக்கு முக்கிய இடம் இருக்கிறது. சினிமா மீது காதலுடனும் கலைத் தாகத்துடனும் புதிதாக தமிழ்த் திரைப்படத்துறைக்குள் வரும் இளைஞர்களுக்கு இன்றும் மகேந்திரன்தான் ஆதர்சம். மணிரத்னம், சங்கர், பாலா உட்பட பிரபல தமிழ் இயக்குநர்கள் அனைவரும், அவர்களுக்குப் பிடித்த தமிழ் திரைப்படங்களாக குறிப்பிடும் வரிசையில் எப்போதும் முதலில் இருப்பது மகேந்திரனின் “உதிரிப்பூக்கள்” தான். சமீபத்தில் இந்திய அரசின் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்துக்காக மகேந்திரன் இயக்கிய “சாசனம்” வெளியானது.



### சந்திப்பு: சிவதாணு

“விளம்பரம்” பத்திரிக்கைக்காக சென்னை ராஜா அண்ணாமலைப்புரத்திலுள்ள மகேந்திரன் இல்லத்தில் அவரைச் சந்தித்தோம்.

மகேந்திரன்: என்னுடைய இரண்டாவது மகள் டொரெண்டோவில்தான் வசிக்கிறாள். அவ்வகையில் கனடாவும் கனடா வாழ் தமிழர்களும் எனக்கு பரிச்சயமானவர்கள்தான். இப்போது “விளம்பரம்” பத்திரிகை மூலமாக மீண்டும் கனடா வாழ் தமிழர்களுடன் உறவாட முடிந்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

கேள்வி: உங்களுடைய “உதிரிப்பூக்கள்” படம் வெளிவந்த போது, தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தார். அவருக்கு மீண்டும் சினிமாவில் நடிக வேண்டும் என்று ஆசை இருந்தது என்றும், அப்போது நன்றாக ஓடிக்கொண்டிருந்த “உதிரிபூக்களை” பார்த்து, நடிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை மாற்றிக் கொண்டார் என்றும் சொல்கிறார்கள். இது உண்மையா? எம்.ஜி.ஆருடன் நெருக்கமாக இருந்தவர் நீங்கள் எனவே உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

மகேந்திரன்: என்னை திரைப்படத்துறைக்குள் கொண்டு வந்தவர் எம்.ஜி.ஆர்.தான். “உதிரிப்பூக்கள்” படத்தை எம்.ஜி.ஆரும் ஜானகி அம்மாளும் பார்த்தார்கள். முடிந்த பிறகு என் தோளில் கை போட்டபடியே, அவருடைய கார் வரைக்கும் அழைத்துச்சென்று, காரில் ஏறி அமர்ந்தார். “படத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே அண்ணே, படம் எப்படி இருந்தது” என்று நான்தான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், “மகேந்திரன் ரொம்ப வருடங்களுக்குப் பிறகு, நான் நிம்மதியாக இன்றுதான் தூங்கப் போறேன்” என்றார். அதன் அர்த்தம் எனக்கு இன்றுவரை புரியவில்லை. நீங்கள் சொன்னது மாதிரி எம்.ஜி.ஆர் முடிவு எடுத்தார் என்று நிறைய பேர் என்னிடம் கூறினார்கள்.

கேள்வி: நீங்கள் இயக்கிய, “பூட்டாத பூட்டுகள்” என்ற படத்தை, சரியாக எடுக்கவில்லை என்று அதன் கதாசிரியர் பொன்னீலன் சமீபத்தில் ஒரு நேர்காணலில் தெரிவித்திருந்தார். இதற்கு உங்கள் பதில் என்ன?

மகேந்திரன்: நான் சினிமாவை வியாபாரமாக எப்போதுமே நினைத்தது இல்லை. அப்படி நான் பார்த்திருந்தால், என்னுடைய “முள்ளும் மலரும்” வெற்றிக்கு பிறகு, அதே கதாநாயகன் ரஜினிகாந்தை வைத்து இரண்டு, மூன்று படங்களை இயக்கி இருப்பேன். அப்படி செய்யாமல் என்னுடைய ரசனைக்கு ஏற்ப “உதரிப்பூக்கள்” படத்தைதானே நான் செய்தேன். “பூட்டாத பூட்டுகள்” படத்தின் கதையை, கண்ணதாசன் இதழில் குறுநாவலாக பொன்னீலன் எழுதினார். பஞ்சு அருணாசலம் படித்துவிட்டு, “இதனை படமாக்கலாம்” என்று என்னிடம் கூறினார். பொன்னீலன் எழுதிய அந்தக் கதை ஓர் உண்மைக் கதை என்றார்கள். அது எனக்குள் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியது. முதலில் அந்தப் படத்திற்கு சுஸ்மிதா பட்டேலையும், நஸீருதின்காவையும் தான் போடணும் என்று முடிவெடுத்தேன். பஞ்சு அருணாசலமும் மும்பை சென்று இருவருடமும் பேசி பாருங்கள் என்றார். பேசினேன் கால்சீட் தருகிறேன் என்றார்கள். என்ன காரணமோ பஞ்சு அருணாசலம் நம்மூர் ஆட்களையே போட்டு படமாக்குங்கள் என்றார். அதற்குள் பாடல்கள் ஒலிப்பதிவு செய்துவிட்டார்கள். படத்தை அந்த சம்பவம் நடந்த ஊரிலேயே படமாக்கினோம். படம் முடிவடைந்ததும் எனக்கு இந்தப் படம் ஓடாது என்று தோன்றியது. இளையராஜாவும் பாரதிராஜாவும் இப்படத்தை மதுரை, ராமநாதபுரத்திற்கு வாங்க முடிவு செய்தார்கள். நான் அவர்கள் இருவரிடமும் இந்தப் படத்தை வாங்காதீர்கள். இது ஓடாது என்றேன். அவர்கள் ஓடும் என்று நம்பினார்கள். படம் எதிர்பார்த்த அளவு ஓடவில்லை. இதன் பிறகுதான் எனக்குத் தெரிந்தது, எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் சம்பவங்களை நாம் படமாக்கினால் மக்களுடைய மனம் ஏத்துக்கொள்ளாது என்று. பல நாடுகளில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தினம் பேப்பரில் படிக்கிறோம். ஆனால், சமீபத்தில் சிங்கள ராணுவத்தால் செஞ்சோலையில் 93 மாணவிகள் கொல்லப்பட்ட சம்பவம், எல்லாவற்றையும் மீறி, இதயங்களில் ரத்தம் கசிய வைத்தது. அது மாதிரிதான், நான் படத்தை சரியாகத்தான் பண்ணினேன். அந்தக் கதையை மக்களால் உள்வாங்க முடியவில்லை.

கேள்வி: ஈழத்திற்கு சென்று, விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துள்ளீர்கள். அந்த அனுபவத்தை சொல்லுங்கள்.

மகேந்திரன்: நான் ஈழத்திற்கு, எப்படி திரைகதை அமைத்து, எப்படி நல்ல யதார்த்த சினிமாவை எடுப்பது என்பதைப் பற்றி பாடம் நடத்தத்தான் சென்றேன். தாமரைசெல்வி எழுதி இருந்த இடைவெளி என்ற சிறுகதையை 90 to 96 என்ற பெயரிலும், அவரே எழுதிய இன்னொரு கதையான பனிச்சமரம் பழுத்திருக்கு என்ற கதையை அதே பெயரிலும் படமாக்கினேன். பிரபாகரனை யாருமே சந்திக்க முடியாது, அப்படி, இப்படி என்று இங்கே சொல்கிறார்கள். அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இது உண்மையல்ல. யார் வேண்டுமானாலும் அவரைச் சந்திக்கலாம். அந்த நாட்டு விடுதலைக்காக அவர் பாடுபடுகிறார். நான் ஈழத்திலிருந்து வந்து ஐந்து மாதங்களுக்கும் பிறகுதான் குமுதம் நிருபர் கதிரிடம் சொன்னேன். மற்றப்படி அதில் நான் என்னை முன்னிலைப்படுத்தணும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு எப்போதும் இல்லை.

கேள்வி: தற்போதைய தமிழ் சினிமாவின் போக்கு குறித்து என்ன நினைக்கிறீர்கள்.

மகேந்திரன்: சமீபத்தில், “இன்டோ சினி அபரேஸ்சிசன் பவுண்டேசன்” நடத்திய உலக சினிமா விழாவிற்கு தலைமை தாங்க போனேன். பொதுவாக நான் சினிமா விழாக்களில் கலந்து கொள்வதே கிடையாது. ஆனாலும் அந்த விழாவில் நான் கலந்துகொண்டேன். காரணம், அவர்களின் நல்லெண்ணம் மற்றும் அன்புதான். அதன் உறுப்பினர்கள் இருநூறு பேர். கேரளாவில் அரசே உலகத்திரைப்பட விழாவை நடத்துகிறது. பல நல்ல படங்களை வரவழைத்து மக்களுக்கு திரையிட்டு காட்டுகிறது. இதனம்மூலம் அவர்கள் மக்களுடைய ரசனையை மேம்படுத்துகிறார்கள். அதுபோல் இங்கும் தமிழ்நாட்டில் மக்களுக்கு உலகத் திரைப்படங்களை காண்பித்து, முதலில் ரசனையை வளர்க்க வேண்டிய தேவை இருக்கிறது. வெறும் விஞ்ஞான வளர்ச்சியை மட்டும் வைத்துக்கொண்டு படம் எடுத்தோமானால் நம்முடைய கலாசாரம், பண்பாடு எதுவுமே அதில் பதிவாகி இருக்காது. வெளிநாட்டவர்கள் நம் படங்களை (தமிழ் சினிமா என்று இல்லை, இந்திய சினிமா) பார்த்தால், ஒரு பையனோ அல்லது ஒரு பெண்ணோ, யாராக இருந்தாலும் “ஐ லவ் யூ” என்று சொல்வதுதான் அவர்களுடைய தலையாய பிரச்சினை போல் என்று நினைப்பார்கள். அந்தளவுக்கு இவர்களுக்கு, தமிழ் திரைப்படத்துறையினருக்கு காதல் மட்டுமே பிரச்சினையாக இருக்கிறது. முதலில் இந்த நிலை மாறணும். பல பிரச்சனைகள் இருக்கிறன. அதையெல்லாம் படமாக்கணும்.

# சர்வதேச தமிழ் குறுந்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

அளித்து வரும் ஒரேயொரு பெண்மணி.
• தர்சினி வரப்பிரகாசம் - சிறப்பான தொகுப்பாளர், பலரின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

### அடுத்த விழாவிற்கான ஆலோசனைகள்

• விழாவிற்கு முன்பாக மாதிரி குறும்படங்களை திரையிட்டு பயிற்சி முகாம்களை நடத்துக.
• மாதம் ஒருதடவையாவது மாதிரி பரீட்சார்த்த உலக தரமான சினிமாப் படங்களை திரையிட்டு கலந்துரையாடவும்
• இம்முறை போன்று புதிய தொழில்நுட்பம் அறிந்த நடுவர்களே தெரிவு செய்யவும்
• முழு நீளத்திரைப்படங்களுக்கான விருதை தவிர்க்கவும். குறும்படங்களுக்கும், முழு நீளத் திரைப்படங்களுக்கு இடையில் வித்தியாசம் அதிகம்.

விழா முடிந்த பின்னர் சுயாதீன திரைப்பட மைய அமைப்பாளர்கள் டிலீப்குமார், ரதன், சிவதாசன் ஆகியோரிடம் விளம்பரம் சில கேள்விகளை கேட்டபொழுது அவர்கள் கூறிய பதில்கள் இவை.

**விளம்பரம்** - முழு நீளத் திரைப்படங்களுக்கான விருதுகள் வழங்கக் காரணம் என்ன? இதற்கு சரியான தேர்வாளரை தேர்வு செய்தீர்களா?

IAFS - முழு நீளத்திரைப்படங்கள் பற்றிய ஒருவிழிப்புணர்வுக்கும், அதேசமயம் அப்படைப்பாளிகளை கௌரவிக்கும் முகமாகவே இந்த விருதையளித்தோம் இதற்கான தேர்வாளரான தேவகாந்தன் பல படங்களில் பணியாற்றியுள்ளார். ‘இலக்கு’ என்ற சிறு சஞ்சிகை ஆசிரியராக இருந்துள்ளார். சுமார் 12 க்கும் மேற்பட்ட நாவல்கள் எழுதியுள்ளார். இந்தியாவில் அவர் இருந்த காலங்களில் பல்வேறு படங்களில், பல்வேறு துறைகளில் பங்குபற்றியுள்ளார்.

**விளம்பரம்** - மறைபொருள் படம் முஸ்லீம் மதத்தினரை புண்படுத்தியுள்ளது என சில பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். இப்படத்தை தேர்வு செய்ததன் காரணம் என்ன?

IAFS - முதலில் இது ஒரு தரமான குறும்படம். இதனை அனைத்து நடுவர்களுமே உறுதிப்படுத்தியுள்ளனர். அடுத்ததாக இது ஒரு பெண்ணின் ஒடுக்குமுறையை விமர்சித்துள்ளது. முன்னால் வீட்டில் சண்டை நடந்தால், அதை பொலிசுக்குத் தெரியப்படுத்துவது எமது கடமை. அந்த வீட்டில் இருப்பவர்கள் தான் தெரியப்படுத்த வேண்டுமல்ல.

**விளம்பரம்** - விழாவில் இடம்பெற்ற தொழில் நுட்ப குறைபாடுகள் பற்றிய உங்களது கருத்து என்ன?

IAFS - இது எமது சக்தியை மீறி நடைபெற்றது. அடுத்த நிகழ்வில் மிக அதிக கவனம் இவ்விடயத்தில் செலுத்தப்படும்.

**விளம்பரம்** - உங்களது Deadline க்கு பிறகு சமர்பித்த படங்களையும் அனுமதித்துள்ளீர்கள். இது தவறானது விடயம் அல்லவா?

IAFS - புதிய படைப்பாளிகளுக்கு வாய்ப்பளிப்பதற்காகவே இந்தத் தளர்வு. கனடாவில் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட படங்களில் இரண்டு படங்கள் மட்டுமே Deadline க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டன. அடுத்த முறை இவ்விடயத்தில் மிகவும் கடினமாகவே இருப்போம். படைப்பாளிகளும் தமது பொறுப்புணர்வை உணர்ந்து செயல்படவேண்டும். இம்முறை கிடைத்த சலுகை அடுத்த முறை கிடையாது.

**விளம்பரம்** - இவ்விழா பற்றிய உங்களது அனுபவங்கள் என்ன?

IAFS - விழாவை சிறப்பாக தொகுத்தளித்த தர்சினி வரப்பிரகாசம், விழாவில் எமக்கு உதவியவர்கள், விழாவை சிறப்பாக விளம்பரப்படுத்திய பத்திரிகைகள், வானொலி தொலைக்காட்சியினர், நடுவர்கள், நிழல் ஆசிரியர் திருநாவுக்கரசு, சேரன் போன்றவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். களைப்பையும் மீறி கலைஞர்களின் புன்னகையில் மீண்டும் புத்துயிர் பெறுகின்றோம். விளம்பரம் எமது விழாவிற்கு தொடர்ச்சியாக அளித்துவரும் ஆதரவிற்கு நாம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்த விழாவில் மேலும் பல புதிய படைப்பாளிகளுடனும் மேலும் பல புதிய குறும்படங்களுடனும் வலம் வருவோம்.



ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்

416-750-8118

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



ஒரு மாதம் முற்றிலும்

# இலவசம்

## FREE PRE-VIEW

tamil one

24 மணி நேரத் தமிழ்த் தொலைக்காட்சி

ROGERS™ Channel 622

அறிமுகப்படுத்தலையொட்டி Tamil One
தொலைக்காட்சி ஒக்டோபர் மாதம் முழுவதும்
Rogers Digital Cable
வாடிக்கையாளர்களுக்கு முற்றிலும்
இலவசமாக தனது சேவையை வழங்குகிறது.

தாயக நிகழ்வுகளை உடனுக்குடன்
காட்சிகளாக எடுத்துவரும் தொலைக்காட்சி

**416. 299.0118**
info@tamilone.ca

# மகிழ்ச்சியுடன் நிறைவுற்றது ஐந்தாவது சர்வதேச தமிழ் குறும்பட விழா

செப்ரெம்பர் சனிக்கிழமை 16 ஆம் திகதியன்று வருடாந்தத் 'தமிழ்குறும்படவிழா' வழமைபோல் நடைபெற்றது. இந்தாண்டு ஸ்காபுறோ நகராட்சிக் கேட்போர் கூடத்தில் கடந்த ஆண்டைவிட ஏறத்தாழ எழுபத்தைந்து பார்வையாளர்கள் மட்டில் இன்னும் அதிகமாகப் பங்கேற்றிருந்தனர். இவ்வளர்ச்சி கலைஞர்களுக்கு மன ஊக்கத்தை இன்னும் அதிகமாகக் கொடுத்திருந்தது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் கலைகள் படிப்படியாக முன்னேறுவதை அன்றைய குறும்பட நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது.

